

# ரமணோதயம்

அக்டோபர் 2025
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



# ரமணோதயம்

ஒரு கால் நூற்றாண்டு
(25 ஆண்டுகள்) கடந்தாகிவிட்டது.
ஒரு ஆன்மிக இதழ் என்பதாக மட்டுமே
தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு
எந்தவித பொருள் ஆதார நோக்கமின்றி
பெரிய கட்டுக்கோப்பு என்று ஒன்றும் இன்றி
எளிமையாக வளர்ந்து உள்ளது.
இதன் சக்தியை உள்ளே திரும்பிப் பார்க்கிறோம்
அங்கே பகவான் ஸ்ரீ ரமணர் தான் உள்ளார்.
ஆதரவாக கூடவே ரமண அன்பர்கள் நீங்கள்
வேராகவும் உரமாகவும் வேறென்ன வேண்டும்.
இந்த சகலமும் இப்பணிக்கு உருதுணையாக நிற்கும்
ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு அர்ப்பணம்.
வந்தனம் அருணாசலா!

உதயம் 25 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்

அக்டோபர் 2025

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2025


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 13 |
| 3 | எளிது ஆனால் கடினம் | | 17 |
| 4 | இனிவரும் திருநாட்கள் | | 19 |
| 5 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 21 |
| 6 | ஆதிசங்கரரின் பக்தி வேதாந்தம் | டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன் | 27 |
| 7 | ரமண புராணம் | ஆகுரா | 39 |
| 8 | தட்சிணாமூர்த்தி தோத்திரம் | சிதம்பர குற்றாலம் | 49 |
| 8 | டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு | மா. முருகேசன் | 55 |
| 10 | ஸ்ரீ ரமணாஸ்ரமம் மஹா கும்பாபிஷேகம் 2025 | | 69 |
| 11 | செய்திகள் | | 77 |

# ஆசிரியர் உரை

## எது நிரந்தரம்

ஒருபொருள், ஒரு செயல் நமக்கு சந்தோஷத்தை தருகிறது. அதில் ஈடுபடலாமா? அது கலப்பற்ற மகிழ்ச்சியைத் தருமா? அது கலப்பற்ற மகிழ்ச்சியைத் தந்தாலும் அது நிரந்தரமா? இதை அனுபவித்தபின் அது மீண்டும் மீண்டும் அதை அநுபவிக்கும்படி பந்தப் படுத்துமா? இங்ஙனம் இன்பம்தரும் வஸ்துவை அது நிரந்தரமா என்று பகுத்து அறிவதுதான் ஞான ஆய்வின் முக்கிய இடம் வகிக்கும் நித்யா நித்ய வஸ்து விவேகம்.

அந்நிய வஸ்துக்களில் ஈடுபடுவது நம்மை நித்ய வஸ்துவான ஆத்மாவில் ஒன்ற உதவாது என்பது அடிப்படை உண்மை.

*“ஜாநாம்யஹம் ஸேவதி[4]ரித்ய நித்யம்*
*ந ஹ்யத்[4]ருவை: ப்ராப்யதே ஹி த்[4]ருவம் தத்*
*ததோ மயா நாசிகேதஸ்சிதோ(அ)க்[3]நி*
*ரநித்யைர்த்[3]ரவ்யை: ப்ராப்தவாநஸ்மி நித்யம்”*

*— (கடோபநிஷத் 1:2:10)*

இங்கே யமன் கூறுவதாவது:

“வினைப் பயன்கள் நிலையற்றவை என்று நான் அறிவேன். நிலையற்ற பொருளை அடைய எவராலும் முடியாது. அதற்கு உதாரணம் நானே. நிலையற்ற பொருள்களால் யாகங்கள் செய்து, நான் நிலையற்ற எமதேவன் என்னும் பதவியை அடைந்துள்ளேன்.

தேவபதவிகூட புண்ணியங்கள் கழிந்த பின்னர் மீண்டும் பிறவி எடுக்க வேண்டித்தான் வரும். எனவே நிலையான ஆத்ம சாட்சாத்காரத்தை மட்டுமே தேடுக!" என்று அறிவுறுத்துகிறான் யமன்.

நம் மனது தனக்கு விருப்பமான ஒன்றை, நாம் தூண்டப்பட வேண்டும் என்பதற்காகவே பல்வேறு நியாயங்களைக் கற்பித்துக் கூறும். க்ஷேத்ராடனம், உபாசனை போன்றவைகள்கூட அநித்யம்தான். ஆத்மா ஒன்றே நித்யம். அதனையே நாடுவாய் என்று உபநிடதம் உபதேசிக்கிறது.

நித்யா நித்ய வஸ்து விவேகம் என்பதையே ஆத்ம அநாத்ம வஸ்து விவேசனம் என்று அறிஞர் பகர்கின்றனர். விவேக சூடாமணியின் ஆரம்பத்திலேயே சங்கர பகவத்பாதர் இதனை அறுதியிட்டுக் கூறுகிறார்.

"பிரஹ்மம் ஸத்யம் ஜகத் மித்யேத் யேவம் ரூபம் விநிச்சயா
யோ(அ)யம் நித்யாநித்ய வஸ்து விவேக ஸமுதா ஹ்ருத்"

பிரம்மம் ஒன்றுதான் ஸத்யம்; ஜகத் என்னும் உலகம் நிஜம்போல் தோன்றினாலும் பொய்யாய்ப் போய்விடும். அது மித்தையே. இதுவே நித்யா நித்ய வஸ்து விவேகம்.

உபநிடதம் போன்ற ஞான நூல்கள் மற்றும் பகவான் போன்ற மார்கதரிசிகள் தோன்றுவதன் நோக்கமே அநித்ய சூழலில் சிக்கியுள்ள உயிர்களை நித்ய வஸ்துகளாகிய ஆத்மாவில் சேர்ப்பதே. நசிகேதஸ் போன்ற குழந்தையிலிருந்து பல்வேறு தேவர்கள், முனிவர்கள் உட்பட பல்லோர்க்கும் இந்த ஞானம் ஊட்டப்படுகிறது.

சாந்தோக்ய உபநிடதத்தில் தேவராஜனும் இந்திரனும் அசுர ராஜனாகிய விரோசனனும் ஆத்மா என்ன என்று ஆய்கின்றனர். விரோசனன் 'தேகமே ஆத்மா' என்ற முடிவுக்கு வருகின்றான். இந்திரன் 'விழிப்பு–கனவு, ஸுஷுப்தி' போன்று பல்வேறு நிலைகளில் காணும் அனுபவங்களை ஆராய்ந்து இவை அனைத்தும்

*நிலையற்றவை என்று உதறிவிட்டு அனைத்துள்ளும் அடிப்படையாய் உள்ள ஆத்மா ஒன்றே நித்யம் என உணர்கிறான்.*

*'இதம் த்ரன்' (ஆத்மாவை தனக்கு அத்யந்தமான உள்வஸ்துவாகக் கண்டு கொண்டவன்) 'இந்த உண்மையை அனுபவத்தால் கண்டவன்' என்ற சொல்களில் இருந்து 'இந்திரன்' என்ற சொல் பிறந்தாக பகவத் பாதர் கூறுகிறார்.*

*ஸ்வாத்ம ப்ரகாசிகா என்ற நூலில் ஆத்மாவை நோக்கி ஞானி கூறுகிறார். பிரம்ம தேவனிடமிருந்து இந்தத் 'தான்' வரை அனைத்துமே நீர்க்குமிழி மற்றும் அலைகள் போன்று உனதுள்ளேயே அடங்கியுள்ளன.*

*சங்கரர் தமது புகழ்பெற்ற அபரோக்ஷானுபூதி நூலின் 33ஆவது ஸ்லோகத்தில் கூறுகிறார். "என் தேகம் தினந்தோறும் மாறிக்கொண்டே வருகிறது. நானாகிய ஆன்மா மாறாமல் இருந்தவாரே உள்ளேன். இந்த உண்மையை அறிந்தவனால் எப்படித் தன்னைத் தேகத்துடன் ஒன்றாகக் கருத முடியும்."*

*பகவான் கிருஷ்ணர் கீதையை ஆரம்பிக்கும்போதே, "ஆத்மா ஒன்றுதான் நித்ய வஸ்து. நீ எதைக் கொல்லத் தயங்குகிறாயோ அந்த தேகங்களும் உறவுகளும் அநித்யமே." 'ஆகமாபாயினோ அநித்யா' என்கிறான் கண்ணன். நாசமற்றதாய் அளவற்றதாய் இருப்பது ஆத்மா ஒன்றுதான்.*

*சரி! அநித்யமான இந்த லோகத்தில் பிறந்து விட்டோம். இதிலிருந்து கடைத்தேற நித்ய வஸ்துவுடன் ஒன்றாகும் வழி என்னவென்றால்,*

*"அநித்யம் அஸுகம் லோகம்*
*இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்"*

*இந்த அநித்யமான லோக பந்தத்திலிருந்து விடுபட, "நித்யமான ப்ரம்மத்தை வழிபடுக" என்கிறது கீதை.*

*அநித்ய வஸ்துக்களில் ஸுகம் கிடைத்ததோ அந்த லட்சியத்தை விரைவில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இந்தப் பிறவியை வீணாக்காமல் பரமாத்மாவை அறிய வேண்டும்.*

*"இஹ சேதகவேதீகததகத ஸத்யமஸ்தி*
*ந சேதிகஹாவேதீகன்மஹதீ வினஷ்டி:"*

*— (கேநோபநிஷதம் 25)*

*கீதையின் 13ஆம் அத்தியாயம், 'க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்' எனப்படுகிறது. க்ஷேத்ரம் என்பது தேஹம். க்ஷேத்ரக்ஞன் என்பது அந்த உடலில் உள்ள ஞானமயமான ஆத்மா. இவைகளை பாகுபடுத்தும், நித்ய –அநித்ய வஸ்துக்களைப் பிரித்தறியும் விவேகம் தான் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞவிபாக யோகம். க்ஷேத்ரம் என்பது பஞ்சபூதங்கள் பஞ்சேந்திரியங்கள், இந்திரியங்கள் தேடிப் போகின்ற வஸ்துக்கள் ஆசை, துவேஷம், ஸுக–துக்கம் அனைத்தும் அடங்கிய நிலையற்ற ஒன்று. இதற்கு மாறுபட்ட க்ஷேத்ரக்ஞன் என்பது நிலையான ஆத்மா. எது அந்நியமாக இருந்தாலும், நித்யத்தில் சேர்க்க துணை செய்வது (பக்தி, பூஜை, யோகம்) போன்றவை. எது அநித்யமானவை. நம்மை இன்னும் ஆழமாகப் புதைப்பது என்று சதா சிந்தித்து விழிப்புணர்வுடன் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.*

*"ப்ராணாயாமம் ப்ரத்யாஹாரம்*
*நித்யானித்ய விவேக விசாரம்"*

*என்று பஜகோவிந்தம் இறுதி ஸ்லோகத்தில் "நித்யா நித்ய வஸ்து விவேகத்தை இடைவிடாமல் செய்ய வேண்டும்" என்கிறார் சங்கரர்.*

*'அநாத்ம ஸ்ரீ விகர்ஹணம்' என்ற நூலில் ஒவ்வொரு ஸ்லோகத்தின் முடிவிலும் ஒருவன் தனது ஆத்மாவை அறியாமல் இருந்தால் மற்றவை அனைத்தினாலும் பயன் ஏதுமில்லை (தத: கிம்) என்று முடிக்கிறார் சங்கரர்.*

*"பக்தி மார்க்கமோ, முக்தி மார்க்கமோ எதையேனும் எனக்குத் தந்து கடையேற்றம் தருணம் இதுவன்றோ" என பாடுகிறார் குணங்குடி மஸ்தான் ஸாஹிப்.*

*"ஆடும் பலிபொருள் ஆட்சி யென்று அங்கிங்கும் அலைந்து*
*படும்பா டதைக்கண்டு பாடுதான் பாரமே*
*சொல்லு பாழ்மனமே கூடும்படு பயன்தேடும்*
*அப்பால் உள்ள மனமே கூட்டம் விட்டு*
*வாடும் படும் பெரும் உண்மை குணங்குடி வாய்த்துமே"*

*பொருள்: "பாழ்மனமே! நிலையற்று ஆடுகின்ற செல்வம், படை ஆடசி அடைவதற்காக அங்கும் இங்கும் அலைந்து திரிந்து துன்பப்படுவதுதான் உன் கொள்கையோ? செல்வத்தைத் தேடும் அந்தக் கூட்டத்தை விட்டுவிட்டு நித்யப் பொருளை நாடித் தவம் இருந்தால் உண்மை குணங்குடி ஈசன் அருள் வந்து உனக்கு வாய்த்திடுமே!"*

*இதேபோன்று தாயுமானவரும் பாடுகிறார்:*

*"நிலை காட்டும் காயம் என்று நிச்சயித்த புலையாட்டம்*
*இது என்று தளைப்போமோ பராபரமே"*

*— பராபரக்கண்ணி 64*

*பகவான் எவரது தூண்டுதலும் இன்றித் தானாகவே இந்நூல்மேல் உங்கட்கு ஏன் இத்தனை பிரியம் என்பதற்கு பகவான், "கேவலம் பிரம்மத்தைப் பற்றியே சொல்லி மற்றவை எல்லாவற்றையும் விட்டுவிடு என்று தொடர்ந்து சொல்லி வஸ்த வடிவத்தை உறுதிப்படுத்தி, மற்றவை மீதுள்ள பற்றை விட்டு ஒழிப்பதற்காக மனத்தை சஞ்சலத்தில் இருந்து மீளச் செய்வதால்" என்று விடையிறுத்தார்.*

*இந்நூலில் 9ஆம் பாடலில், பகவான் நித்ய வஸ்துவையே பற்றிக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.*

*"உள்வெளி மேல்கீழ் நடுதிக்கு ஓர் சிறிதுமின்றி*
*உள்ளஉரு எல்லாமாய் ஒருருவும் இல்லாததால்*


*தான் தனக்கே வேத்தியமாய் தானே இலங்கிடுமான்*
*பூன்றமாம் ஒன்றே புணர்"*

இதன் பொருள்: "உள்ளும் வெளியும், மேலும் கீழும் நடுவும் என்ற திசைகள் ஒரு சிறிதும் இல்லாததால் உலகத்தில் தோன்றும் அத்தனை உருவங்களும் ஆகிற தன்னைத் தானாகவே அறியக் கூடியதாய் தன்னைத் தானே பிரகாசித்துக் கொள்ளுவதாய் விளங்கும் பரிபூர்ணமான ஏகமான ஸ்வரூபத்தையே சேர்வாயாக."

*ஞான விசாரப்படலம் 21ஆம் பாடலில் விளக்கும்போது பகவான் கூறுகிறார்:*

*"அநித்யமான விஷய போகங்களை அனுபவிக்கும் போது மனதிற்கு போதும் என்ற திருப்தியே ஏற்படாது. மாறாக அனுபவிக்கும்போதும் அவற்றின்மீது ஆசை அதிகரித்து அதனையே நினைத்து நினைத்து குரங்கைப்போல சதா சலித்துக் கொண்டு இருக்கும். இதை சலிக்காமல் செய்யவேண்டும் எனில், அதுபற்றும்படி விஷயங்களைக் கொடுக்காமல் இருப்பதுதான் உபாயமாகும். மனம் நிலையற்ற, அநித்திய வஸ்துக்களைப் பற்றிய விஷயங்களை சேகரித்துக் கொண்டு, வெளிமுகமாய் நாடி நிற்கும். அநித்ய விஷயங்களை பற்றி, விஷயங்களைச் சேகரித்துக்கொண்டே இருக்கும். மனத்தை வெளி விஷயங்களைப் பற்றித் திரிய விடாமல் உள்முகமாக்கு. அந்த விஷய வஸ்துக்களைத் தூண்டிய 'ஸர்வ துன்ப பதத்தில் நிலை நிறுத்துக!'"*

*வந்துசேர்ந்த ஜீவன், பிராணன் மனம் புத்தி அஹங்காரம் எனப்படும் நான்கு சாகரங்களுடன் சேர்ந்து அநித்ய வஸ்துக்களாகின்றன. அநித்ய வஸ்துக்கள் நித்ய வஸ்துக்கள்போல் எண்ணும்படி நம்மை மயக்குகிறது. ஏகஸ்வரூபமாய் பிரகாசிக்கும் ஆன்மா இவற்றிற்கு எல்லாம் அந்நியமாயும் அப்பாலுக்கு அப்பாலாய் உள்ள ஒரே நித்ய வஸ்து என்று உணர்ந்து, அதிலேயே*



*நிலைபெற வேண்டும் என்பதே பகவானின் உபதேசம் (தேவிகாலோத்தரம் 32).*

*“நித்ய வஸ்துவாய் ஆன்மாவை அநித்ய வஸ்துக்கள் சூழ்ந்து இருப்பினும், அவற்றால் அது பாதிக்கப்படுவதில்லை; மாசுபடுவதில்லை. எல்லா வஸ்துக்களின் உள்ளும் புறமும் வியாபித்து இருந்தாலும் அவற்றின் குணங்கள் நீர் நனைத்தல், நெருப்பு எரித்தல், காற்று உலர்த்தல் போன்று எவையும் ஆகாசத்தை ஒட்டாதது போல் உலகிலுள்ள அத்தனை உருவத்திலும் பரவஸ்து வியாபித்து இருந்தாலும் அவற்றின் உபாதைகள் ஆத்மாவைச் சிறிதும் பற்றுவதில்லை. அதனையே நித்யம் என்று உணர்ந்து பற்றுவாயாக.” (ஞானாசார விசாரப்படலம் 36)*

*எப்படி அந்நிய வஸ்துக்களில் இருந்து நீங்கி, நித்ய வஸ்துவைப் பற்றுவது? நமக்குப் பற்றுக் கோடாக பரவஸ்துவின் ஒரு ஸ்வரூபமாவது வேண்டாமா?*

எதைப் பிடித்துக் கொள்வது என்ற கேள்விக்கு பகவான் மிக அழகாக விடை அளிக்கிறார். குருநாதனுடைய சொரூபமே உனக்கு காரண கர்த்தாவாகிய ஈஸ்வரனின் சொரூபம். இதனை விடாமல் பற்றிக் கொள். மாறுபட்ட வழிகளில் சென்றால் உன்னைப் பந்தங்கள் பற்றிக் கொள்ளும்.

"நானே பரப்பிரம்மம் நாதன்உலகுக்கு ஈசன்
ஆன இந்நிச்சயம் ஆர்புருடன் தானேநன்
முத்தனாம் அன்றி முரண்வழியில் செல்புருடன்
பெத்தனாம் என்றுநீ பேண்."

— (ஞானாசர விசாரப்படலம் 50)

'குரும் ஏவாமி கச்சேத்' என்ற உபநிஷத் வாக்யத்தை பகவானின் இந்த வெண்பா பிரதிபலிக்கிறது.

"காலத்தால் மாறுபடாததாய், என்றும் ஒருபொருளாய் இருப்பதே நித்ய வஸ்து. ஒரு காலத்தில் இருந்து மறுகாலத்தில் இல்லாமல் போவதோ, அல்லது மாறுபாடு அடைவதோ அந்நிய வஸ்துக்களின் பண்பாகும். நிராகார ஸ்வரூபமான ஸர்வ வியாபியான ஆன்மா ஒன்றே நித்யமாகும். அந்தப் பரம்பொருளே நான், பற்பல விதமான வடிவ வேறுபாடுகளினால் ஒன்றைப்போல் ஒன்று மற்றொன்று இல்லாமல் வேறுவேறாகிய உலகங்கள் அடுக்குகளாக வரிசையாக அமைந்துள்ளன. சிருஷ்டியில் உள்ள அனைத்தும் ஆன்மாவாகிய என்னிடத்தில்தான் நிலைபெற்று உள்ளன" என்று 'ஆன்ம சாட்சாத்கார பிரகரணத்தில்' பல்வேறு பாடல்களில் பகவான் கூறுகிறார்.

நித்ய வஸ்து என்று இதுகாறும் ஆராய்ந்தோம். நித்ய வஸ்து என்றால் என்ன அது? இதற்கு பகவானே தமது பகவத் கீதாசாரம் 8 ஆவது பாடலில் விடை தருகிறார்.

"எதனால் நிறைவெய்துமே இவைஎல்லாம்
அது அழிவில்லாதது அறிவாய் எதனாலும்
மாளாத அப்பொருளை மாளச் செயவல்ல
வாளாகான் ஆரும் அறி"

“காணக்கூடிய இவ்வுலகம் அனைத்தும் எதனால் வியாபிக்கப்பட்டு நிறைவு அடைந்து பொருந்துமோ அந்த வஸ்துவே அழிவற்றதென்று அறிவாய். எதைக் கொண்டும் அழிக்க முடியாத அந்த அம்மயமான ஆத்மாவை அழிக்கக் கூடிய வல்லமையான யாரும் இல்லை என்று அறிவாய்” என்பது இதன் பொருள்.

பகவான் இதை விளக்கும்போது, ஒரு பொருளை ஓர் இடத்தில் இருந்து அகற்ற வேண்டுமானால் அதை கைகொடுத்து நீக்க சிறிதாவது இடைவெளி இருந்தால்தான் முடியும். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஆத்மாவை இடைவெளி ஏதும் இல்லாததால் அதை அகற்றி அழியச் செய்ய இயலாது.

பகவத் கீதையின் பிரசித்தி பெற்ற ஸ்லோகமாகிய

“நாஸதே வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத:”

என்பதனை தழிழாக்கம் செய்யும்போது பகவான் கூறுகிறார். “இல்லாததாகிய பொய்ம்மைப் பொருளுக்கு இருப்பு என்பதே இல்லை. என்றும் உள்ளதாகிய மெய்ப்பொருளுக்கு எப்போதுமே இல்லாமை என்பதே இல்லை. உள்ளதாகிய மெய்ப்பொருளுக்கு எப்போதுமே இல்லாமை என்ற நிலைமையே இல்லை. எனவே அநித்யமான பொருளை ‘அஸத்’ என்றும் நித்யமான பொருளையே ‘ஸத்’ என்றும் இவ்விரண்டின் உண்மையினை தம் உள்ளுணர்வினால் அறிந்தவதே மெய்ஞ்ஞானி ஆவார்.”

ஏகான்ம பஞ்சகத்தில் கூறியதுபோல், “பொன்னை ஆபரணமாக செய்வதற்கு முன்னும் அது பொன்னே. ஆபரணமாக்கிய நிலையிலும் அது பொன்னே. ஆபரணத்தை உருக்கிய பின்னும் அது பொன்னே. உருவாக்கப்பட்ட ஆபரணம் அநித்யமே. அதற்கு அழிவு நேர்கிறது தவிர, அடிப்படையான பொன்னுக்கு அழிவே இல்லை. அதேபோல் ஜீவன் அறியாமையால் தன்னை வெவ்வேறு அநித்ய வஸ்துக்களுடன் தொடர்பு

*கொண்டாலும், அடிப்படையான ஆன்மா மாறுபடாமல் நித்யமாக உள்ளது.*

*ஆன்மபோதம் நூலின் 16ஆவது பாடலை விளக்கும் போது, உமியுடன்கூடிய நெல்லை உலக்கையால் நன்றாகக் குத்தி, அரிசியை பிரித்தெடுப்பதுபோல பஞ்சகோசங்களின் உள்ளே பிரகாசிக்கும் ஆன்மாவை சுருதி யுக்திகளாலும் விசாரத்தாலும் பஞ்ச கோசங்களை நீக்கி, உள்ளே ஒளிரும் ஆனமாவைக் கண்டறி.”*

*உள்ளே நோக்கித் திரும்பிய விசாரத்தினால் அந்நியமான பஞ்சகோசங்களையும் நீக்கி ‘நீ யார்?’ என்பதை அறிவாய்” என்கிறார் பகவான்.*

*இதை எப்படிச் செய்வது என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார் பகவான்:*

*“‘தேகம் நானல்ல; இந்திரியங்கள் நானல்ல’ என்ற வேதாந்த வாக்கியங்களால் எல்லா உபாதிகளையும் நீக்கிவிடு. எஞ்சியிருப்பது ஒன்றே. அதுவே ஆத்மா. இது நான், அது நான் என்கிற உபாதி உணர்வுள்ளதை ‘ஜீவன்’ என்கிறார். இந்த உபாதி உணர்வுதான் ஆன்மாவை மறைத்துக் கொண்டு உள்ளது. இந்த மறைப்பு நீங்க ஆன்மவிசாரம் செய்து, குருவின் வழிகாட்டுதல்படி ஸ்ரவணம், மனனம், நிதித்யாசனம் இடைவிடாத ஆன்மவிசாரம் போன்றவற்றில் ஈடுபடவேண்டும். ஆன்ம விசாரத்தினால் மறைப்புகள் நீங்கி ஆன்மா பிரகாசிக்கிறது”.*

*நித்யாநித்ய வஸ்து விவேகத்தினை தொடர்ந்து காண்போம்.*

*பகவான் பணியில்*

*தங்கள்*

*ராம்மோஹன்*

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### *30. துரிய தரிசனம்*

*குறள் 291: வன்னிய தெட்டு மதியம் பதினாறு*
*முன்னிய பன்னிரண்டு முள.*

*பொருள்: இந்தக் குறள் பிராணாயாமத்தை பற்றிக் கூறுவது. சூரியன், சந்திரன், அக்னி என்னும் மூன்று வகையான வெப்பக் கதிர்களும் ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட மூச்சுப் பயிற்சியுடன் (பிராணாயாமப் பயிற்சி) தொடர்புடையவை. இடது நாசியின் வழியாக செயல்பட்டு வெளியேறும் ப்ராணன், 'சந்திரகலை' அல்லது 'இடகலை' எனப்படும். வலது நாசியின் வாயிலாக வெளிப்படும் சுவாசம் 'பிங்கலை' எனப்படும். சூரியனுக்கு பன்னிரண்டு விதமான கலைகளும் (பிராணாயாம இயக்கம்) சந்திரனுக்கு பதினான்கு கலைகளும், அக்னிக்கு எட்டு கலைகளும் உள்ளன. பிராணாயாமத்தில் தேர்ந்த யோக நிலைகளைத்தான் நோக்கத்திற்கு ஏற்ப நெறிப்படுத்துமாம்.*

*குறள் 292: சூரியன் வன்னியொன் றாகிடிற் சோமனாம்*
*பாரு மினீது பயன்.*

*பொருள்: சூரியகலையும் அக்னி கலையும் யோகப் பயிற்சியில் கலந்தபின் சந்திரகலை மேலெழும் இதுவே பேரின்பம் காணுங்கள்.*

*"சிவயோகத்தில் அடையும் பேரின்பத்தை பாருங்கள்! ஈது பயன்" என எடுத்துக் காட்டுகிறார் ஔவைப் பிராட்டி.*



“நாம் சிவனைத் தியானித்து சிவயோகப் பயிற்சிகள் முற்றிலும் ஈடுபட்டால் நம்முடைய ஸ்தூல உடல் சூக்ஷ்ம சரீரம் உள்ளிட்ட மூவகை நிலை உடல்களையும் சிவனே குருவாய் வந்து குருதக்ஷணையாய் பெறுவது போல் தனதுடைமை ஆக்கிக் கொள்கிறார்.

சிவனே குருவாய் வந்து, உடல், பொருள், ஆவி மூன்றையும் காணிக்கையாகப் பெற்றுக் கொள்கிறான். அப்போது ‘நான்’ என்னும் ஜீவபோதம் அழிந்து சிவபோதம் முழுமையாய் ஆட்கொள்கிறது. சூரியகலை, அக்னிகலை முதலில் சிவயோகப் பயிற்சியில் கலந்த பின்னர் சந்திரகலை என்னும் ஞானம் உதிக்கிறது. அப்போது உள்ளம் உருகி, இன்ப வெள்ளம் இதயத்தில் பாயும். இதை அனுபவித்துப் பாருங்கள்” என்கிறார் ஔவை பிராட்டி.

குறள் 293: மதியொடு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவ னாமென்று காண்.

பொருள்: அதேபோன்று யோக மார்க்கத்தில் சந்திர கலையான இடக்கலையுடன் அக்னிகலை

*கலக்கும்போது, யோகப் பயிற்சியின் பரிணாயமத்தில் சூரியகலை தானாகவே வெளிப்படும்.*

*யோகப் பயிற்சியின் பரிணாமத்தில், சந்திர சக்தியும் அக்னி சக்தியும் ஒருங்கே இணையும்போது, அதிலிருந்து ஞானத்தின் பேரொளி அல்லது உண்மையான ஞானம் வெளிப்படும். யோகப் பயிற்சியில், உடலில் உள்ள குளிர்ச்சியான (மதி) சக்தியும் வெப்பமான (வன்னி) சக்தியும் ஒருமைப்படும்போது, அது முழுமையான பேரொளியாக (கதிரவன்) மாறும். இது யோகத்தின் உச்சநிலை அல்லது துரிய நிலையைக் குறிக்கும்.*

*குறள் 294:* மதியொடு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவ னாமென்று காண்.

*பொருள்: இந்த யோகப் பாடல், சந்திர (மதி) சக்தியும் சூரிய (கதிரவன்) சக்தியும் (முறையே இடைகலை மற்றும் பிங்கலை நாடிகள்) ஒன்றுக்குள் ஒன்று முழுமையாகக் கலந்து ஒடுங்கும் போது, பௌர்ணமிக்குரிய முழுமையான ஞானம் வெளிப்படும் என்பதைக் குறிக்கிறது.*

*இது சக்தி சமநிலை, ஆன்மிக ஐக்கியம், மற்றும் முழுமை உணர்வு (பேரின்பம்) ஆகியவற்றை அடையும் நிலையைக் குறிக்கிறது.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2025

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *அக்டோபர்* | 6 | *திங்கள்* | *மதியம் 12:23* | 7 | *செவ்வாய்* | *காலை 9:20* |
| *நவம்பர்* | 4 | *செவ்வாய்* | *இரவு 10:40* | 5 | *புதன்* | *மாலை 6:48* |
| *டிசம்பர்* | 4 | *வியாழன்* | *காலை 8:35* | 5 | *வெள்ளி* | *அதிகாலை 4:45* |



# எளிது ஆனால் கடினம்

*[தி மவுண்டன் பாத்' இதழின் 1966 ஜனவரி பதிப்பில் திரு. G.L.N. எழுதிய 'Easy Yet Difficult' என்ற கட்டுரையின் தமிழாக்கம்.]*

பகவானுடனான எனது தொடர்பு 1930 இல் தொடங்கியது. நான் எந்தத் திட்டமுமிடாமல், தெய்வீக அருளாலேயே ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் தங்கும் வாய்ப்பு அமைந்தது. இது ஒரு பெரும் பாக்கியம்.

நான் ஓர் அறிவியல் பட்டதாரி. அண்டத்தின் அணு அமைப்பு பற்றியும், பருப்பொருள் இறுதியில் எவ்வாறு ஆற்றலாக மாறுகிறது என்பதையும், மனமும் ஒரு வகையான ஆற்றல் என்பதையும் நான் கற்றுக்கொண்டிருந்தேன். அப்படியானால், மனம் மற்றும் பருப்பொருள் அடங்கிய முழு உலகமும், அதன் மூலத்தைக் கண்டறியும்போது, அது ஒரே சீரான ஆற்றல், அல்லது கடவுள், அல்லது நீங்கள் எதை வேண்டுமானாலும் அழைக்கலாம் என்ற மனநிலையில் ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு நான் முதன்முதலில் சென்றேன்.

'உள்ளது நாற்பது' நூலினை யோகி ராமையாவின் வேண்டுகோளின்படி அப்போது பகவான் தெலுங்கில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அதை முடித்தபின், அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து, நீ ஆந்திரக்காரன்; இதில் ஏதேனும் இலக்கணப் பிழைகள் இருக்கிறதா என்று பார், என்றார். இதை பகவான் என்மீது கொண்ட ஒரு கருணையாக உணந்தேன். ஏனென்றால் அந்த மொழிபெயர்ப்புதான் என் மனதை

உள்முகமாகத் திருப்பி, என்னைச் சரியான பாதையில் செலுத்தியதற்கு காரணமாக அமைந்தது.

பகவானுடனான சம்பாஷணைகளின்போது, அவர் எனக்குக் கூறியவற்றின் சாராம்சம் இதுதான்:

“இறுதியான பகுப்பாய்வின்படி நான் பார்ப்பது, சிந்திப்பது, செய்வது அனைத்தும் ஒன்று என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அது உண்மையில் இரண்டு கருத்துக்களைக் கொண்டுள்ளது பார்க்கப்படும் அனைத்தும் மற்றும் பார்க்கும், சிந்திக்கும், செயல்படும் ’நான்’, மேலும் ’நான்’ என்று கூறும் ’நான்’.

இந்த இரண்டில் எது மிகவும் நிஜமானது, உண்மையானது மற்றும் முக்கியமானது? வெளிப்படையாக, பார்ப்பவர்தான், ஏனெனில் பார்க்கப்படுவது அதைப் பொறுத்தது. எனவே, உங்கள் ’நான்’ என்பதன் மூலமாக இருக்கும் பார்ப்பவர் மீது உங்கள் கவனத்தைத் திருப்புங்கள், அதை உணருங்கள். இதுதான் உண்மையான பணி. இவ்வளவு காலம் நீங்கள் பொருளைப் படித்துக்கொண்டிருந்தீர்கள், கருவைப் படிக்கவில்லை; இப்போது ’நான்’ என்ற இந்த வார்த்தை எந்த யதார்த்தத்திற்காக நிற்கிறது என்பதைக் கண்டறியுங்கள். ’நான்’ என்ற வெளிப்பாட்டின் மூலமாக இருக்கும் உட்பொருளைக் கண்டறியுங்கள். அதுவே ஆன்மா, அனைத்து ஆன்மாக்களின் ஆன்மா.”

இந்த நேரடியான, எளிய போதனை எனக்கு ஒரு டானிக் போல இருந்தது. அது இதுநாள்வரை என் மனதை ஆட்டிப்படைத்த அமைதியின்மையையும் குழப்பத்தையும் அகற்றியது. இது நிச்சயமாக, ’உள்ளது நாற்பது’ இன் சாராம்சம் மற்றும் பகவானின் அனைத்து எழுத்துக்களின் மையக் கருத்தாகும்.

அதன் எளிமை என்னை இவ்வாறு கூற வைத்தது: “அப்படியானால் பகவானே, ’ஆன்ம வித்யா’ வில்

நீங்கள் சொல்வது போல், ஆன்ம ஞானம் மிகவும் எளிதானது!"

பகவான் புன்னகைத்து, "ஆமாம், ஆமாம், முதலில் அப்படித் தோன்றுகிறது, ஆனால் சிரமமும் இருக்கிறது. உங்கள் தற்போதைய தவறான மதிப்பீடுகளையும் தவறான அடையாளத்தையும் நீங்கள் கடக்க வேண்டும். எனவே, இந்தத் தேடலுக்குச் செறிவான முயற்சியும், மூலத்தை அடைந்ததும் அதில் உறுதியான நிலைத்திருக்கும் தன்மையும் தேவை" என்றார்.

இருப்பினும், எச்சரிக்கும்போதே, ஆறுதல் வார்த்தைகளையும் சேர்த்தார்: "ஆனால் அது உங்களைத் தடுக்க விடாதீர்கள். 'நான்' என்பதைத் தேடும் உந்துதலின் எழுச்சியே தெய்வீக அருளின் செயலாகும். இந்த உந்துதல் உங்களைப் பற்றிக் கொண்டவுடன், நீங்கள் அதன் பிடியில் இருக்கிறீர்கள். ஒரு புலியின் வாயில் சிக்கிய இரை ஒருபோதும் தப்ப இயலாதது போல தெய்வீக அருளின் பிடி ஒருபோதும் தளராது, இறுதியாக உங்களை விழுங்கிவிடும்."

## இனிவரும் திருநாட்கள் 2025

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| *சரஸ்வதி பூஜை* | *01/10/2025* | *புதன்* |
| *விஜயதசமி* | *02/10/2025* | *வியாழன்* |
| *தீபாவளி* | *20/10/2025* | *திங்கள்* |
| *கார்த்திகை தீபோற்சவம் துவக்கம்* | *25/11/2025* | *செவ்வாய்* |
| *கார்த்திகை தீபம்* | *4/12/2025* | *வியாழன்* |



# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 38. என் புதிய வாழ்க்கைச் சிந்தனை

*ஆசிரமத்தில் நான் தங்கியிருந்தபோது, வாழ்க்கையைப் பற்றிய என் புதிய புரிதலுக்கு ஒரு தெளிவான வரையறையைக் கண்டறிவது எனக்கு மிகவும் சவாலான காரியங்களில் ஒன்றாக இருந்தது. இந்த புதிய எண்ணம் என் இருப்பின் மையமாகத் தெரிகிறது. என் ப்ரக்ஞை உணர்வு இதை மையமாய் கொண்டே சுழல்கிறது. இந்த வரையறை எனக்கு இறுதி உண்மையாக இருக்க வேண்டும், ஏனெனில் வேறு எதுவும் சரியாக இருக்காது.*

*நான் கண்ட நூற்றுக்கணக்கான யோசனைகளில், ஒன்றுகூட சரியானதாக இல்லை. நிபந்தனைக்குட்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட எந்த வரையறைகளையும் நான் நிராகரிக்க வேண்டியிருந்தது. சிக்கலான வார்த்தைகளைப் பயன்படுத்தி, நடைமுறைப்படுத்த முடியாத யோசனைகள் எனக்குப் பயனற்றவையாகத் தோன்றுகின்றன. அவை ஆன்மிக உண்மையை நாடுபவரைவிட, ஓய்வுபெற்ற தத்துவப் பேராசிரியர் களுக்குத்தான் அதிகம் பொருந்தும். என் உள் அனுபவத்துடன் ஒத்துப் போகும், என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்துபேசும் ஒரு உண்மையான வரையறை நிச்சயம் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.*

இந்த ‘மெய்யான வாழ்க்கையை’ கண்டறிந்தவர்கள் அதை மிகுந்த ஆர்வத்துடன் பேசுகிறார்கள். அதுவே ஒரே குறிக்கோள் என்றும், எல்லாவற்றையும் தியாகம் செய்ய அதுவே தகுதியானது என்றும் கூறுகிறார்கள், ஏனெனில் மற்ற அனைத்தும் ஒரு மாயை. ஆனால் அவர்களின் வார்த்தைகள் ஒரு தொலைதூர இடத்தி லிருந்துவரும் அழகான இசை போல் எனக்குத் தோன்றுகின்றன. என் சொந்த தேடலில், பெயர் அல்லது வடிவம் கொண்ட அனைத்தையும் நான் விட்டுவிட வேண்டியிருந்தது. எந்த வடிவமும், முகமூடியும் இல்லாமல் எஞ்சியிருப்பது வாழ்க்கையே ஆகும்.

தியானத்தின் மூலம், நான் புற உலகத்தின் யதார்த்தம் என்ற எண்ணத்தை எவ்வளவு அதிகமாக விட்டுவிடுகிறேனோ, அவ்வளவு அதிகமாக என் குறிக்கோளுக்கு நான் நெருக்கமாகிறேன் என்பதை உணர்ந்து கொண்டேன். இந்த செயல்முறை எளிதானது. வெளிப்புறப் பொருட்கள் எனது ‘தானாகிய மெய்ம்மையை’ எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைப்பற்றி நான் அமைதியாகத் தியானிக்கும்போது, அவை எனது உண்மையான இருப்புக்கு அர்த்தமற்றவை என்ற உண்மையை நான் அடிக்கடி புரிந்துகொள்கிறேன்.

அப்போது, அனைத்து நிபந்தனைகளிலிருந்தும் விடுபட்ட ஒரு ‘பார்வை’ எனக்குக் கிடைக்கிறது. இந்தப் பார்வை, அதை விவரிக்க சரியான வார்த்தை இல்லை என்றாலும், அதன் தாக்கம் ஒரு நீடித்த நினைவகமாக நிலைத்திருக்கிறது. இது என்னை ஒரு சிந்தனைக்கு இட்டுச் செல்கிறது. ‘உணர்வு மட்டுமே வாழ்க்கை’. இது எல்லாவற்றிலிருந்தும் விடுபட்ட ஒரு தூய விழிப்புணர்வு, ‘நான் இருக்கிறேன்’ என்ற எளிய உணர்வால் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த “நான்” என்பது என் உடல் மற்றும் புலன்களுடன் பிணைக்கப்பட்ட எனது சிறிய சுயம்

அல்ல. உண்மையில், அந்த சிறிய சுயம் எனது உண்மையான சுயத்திற்கு எதிரானது. இந்த 'நான்' உணர்வு, நவீன தத்துவவாதிகள் 'அண்ட உணர்வு' அல்லது 'அண்டச் சுயம்' என்று அழைப்பதற்கு ஒத்திருக்கிறது. இந்த உணர்வு முற்றிலும் ஆனந்தமயமானது.

## 39. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்....

> *'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும்.'*

இது நம் உலகத்தின் விதியை உணர்ந்து கொள்ள உதவும் திறவுகோல். உண்மையாகவே ஞானத்தைத் தேடும் ஒருவரை ஒரு உயர் சக்தி ஒருபோதும் கைவிடாது. எனினும், ஆன்மிகப் பாதையைத் தேடுவது உலக செல்வங்களுக்கு வழிவகுக்கும் என்று இதற்குப் பொருள் இல்லை. ஒரு ஞானி செல்வங்களை விரும்புவதில்லை. குறைந்த உடைமைகளுடன் அவர்கள் மகிழ்ச்சியாகவும், தங்களது வாழ்க்கைக்கும் நோக்கத்திற்கும் தேவையானவற்றை மட்டுமே விரும்புகிறார்கள். ஒருவருக்குத் தேவையான உடைமைகள், தட்பவெப்பநிலை மற்றும் அவர்கள் வாழும் இடத்தைப் பொறுத்து மாறுபடும்.

உதாரணமாக, ரமண மகரிஷி தனது வாழ்நாள் முழுவதும் ஒரு சிறிய தண்ணீர் பாத்திரத்தையும், மலை ஏறுவதற்கு உதவும் ஒரு மூங்கில் குச்சியையும் மட்டுமே வைத்து வாழ்ந்தார். அவரது வெப்பமண்டல காலநிலையில், ஒரு சாதாரண கோவணம் போதுமான உடையாக இருந்தது. இந்தியாவில் பொதுவாகக் காணப்படும் இந்த எளிய வாழ்க்கை முறை, மனிதத் தேவைகளைக் குறைக்கிறது.

ஆனால், குளிர்ந்த காலநிலைகளில், நமது தோல் நம்மை வானிலையிலிருந்து பாதுகாக்க போதுமானதாக இல்லை. நமக்கு அதிக உடைகளும் சரியான வீடுகளும் தேவை. இவை குளிர்ந்த நாடுகளில் இருப்பதற்கு அவசியமான அடிப்படைத் தேவைகள், அவை மேலும் பல தேவைகளையும் சிக்கல்களையும் உருவாக்குகின்றன. எனவே, மகரிஷி போன்ற ஒரு துறவியைவிட அதிக உடைமைகள் வைத்திருப்பது நமக்குத் தவறல்ல.

உண்மையான பிரச்சினை உடைமைகளில் அல்ல, அவற்றை நாம் அணுகும் மனப்பான்மையில்தான் உள்ளது. அவற்றை வாழ்க்கையின் ஒரு தேவையான பகுதியாக நாம் கருதினால், அவை ஒரு உயர் நோக்கத்தைத் தேடுவதற்கு நமக்குத் தடையாக இருக்காது. ஆனால், நமது ஆசைகளால் நாம் தொடர்ந்து உந்தப்பட்டு, உடைமைகளைப் பெறுவதை நமது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, வாழ்க்கையின் உயர்ந்த நோக்கத்தை மறந்துவிட்டால், நாம் உண்மையை நாடவில்லை. இந்த நிலையில், நாம் திருப்தியைக் காண மாட்டோம், மேலும் நமக்கு நாமே அதிகமான துன்பங்களை உருவாக்கிக் கொள்வோம்.

இப்போது, பெரும்பாலான மக்கள் உலகப் பொருட்களுக்கான தங்கள் ஆசைகளைத் திருப்திப்படுத்த மட்டுமே வாழ்கிறார்கள், அதற்கு அப்பால் எதையும் பார்ப்பதில்லை. சுயநல ஆசைகளை விட செல்வங்கள் எப்போதும் குறைவாகவே உள்ளன. இது நமது உண்மையான இலக்கைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறது. உடைமைகளுக்கான பேராசை வளரும்போது, மக்கள் மற்றவர்களிடமிருந்து பொருட்களைப வலிந்தமுறையில் பறிக்கவும் முயல்கிறார்கள், இது வன்முறை மற்றும் அதிக துன்பத்திற்கு வழிவகுக்கிறது.

துன்பம் வெறுக்கப்பட்டாலும், நமக்குள்ளே உள்ள தீமையின் விஷத்தை மறுதலையாக்கும் ஒரே வழி. துன்பம் அதன் காரணத்தைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும்போது, நமது பாதை மேல்நோக்கித் திரும்பத் தொடங்குகிறது. இதுவே 'உண்மையைத் தேடுவது' உண்மையில் தொடங்கும் தருணம். சரியான நேரத்தில், இந்த பயணத்தை முடித்து, முழுமையான ஞானத்தையும் அனுபவத்தையும் பெற்ற ஒருவரை நாம் சந்திக்கிறோம். இந்த முழுமையான மனிதர் இந்துக்களால் குரு அல்லது மேற்கத்தியர்களால் மாஸ்டர் என்று அழைக்கப்படுகிறார்.

ஒரு மாஸ்டரைச் சந்திப்பது ஒரு பெரிய வரம் மற்றும் ஒரு பெரிய பொறுப்பு. எனது இந்து நண்பர்கள், இந்த வாய்ப்பை இழப்பது வாழ்க்கையின் மிகப்பெரிய தவறு என்று நம்புகிறார்கள்.

மகரிஷியைச் சுற்றிலும் விசித்திரமான விஷயங்கள் நடக்கின்றன. ஒரு தூய ஆன்மிக இருப்பின் சக்திவாய்ந்த ஆற்றலை எல்லோராலும் தாங்க முடியாது. சிலர் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தங்கள் மன அல்லது உணர்ச்சி சமநிலையை இழந்து, முட்டாள்தனமாக நடந்து கொள்கிறார்கள். ஆனால், சில சமயங்களில் ஒருவரின் உள் பிரச்சினைகள் அவரது அருகாமையில் குணமடைவதும் உண்டு. அவரது போதனைகளையும் அவற்றின் மறைந்திருக்கும் பொருளையும் உண்மையிலேயே புரிந்து கொள்ளக் கூடியவர்களே அதிகம் பயனடைகிறார்கள்.

மகரிஷியின் வார்த்தைகள் மிகவும் எளிமையானதாகவும் நேரடியாகவும் இருந்தாலும், அவற்றுக்கு ஒரு ஆழமான பொருள் உண்டு. அவரது போதனைகள் ஆன்மிக உலகத்திலிருந்து வந்தவை, அவற்றை வார்த்தைகளால் முழுமையாக வெளிப்படுத்த முடியாது. மகரிஷியிடம் இருந்து

கற்றுக்கொள்வது என்பது உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்றை நினைவில் கொள்வது போன்றது. உண்மை, ஆன்மா அல்லது கடவுள் என்று அழைக்கப்படும் உண்மையான சுயமானது எப்போதும் நமக்குள்ளேயே இருக்கிறது” என்று அவர் கூறுகிறார். நமது அறியாமை அதை எண்ணங்களின் திரையால் மூடுகிறது. நாம் செய்ய வேண்டியது அந்த திரையை அகற்றுவது மட்டுமே. அப்போது, ஒளி தானாகவே பிரகாசித்து உங்கள் முழு இருப்புக்கும் பரவும். அதை வேறு எங்காவது தேட வேண்டிய அவசியம் இருக்காது.

பரலோக ராஜ்ஜியம் நமக்குள்ளேயே இருக்கிறது, ஆனால் நம்மால் அதை நினைவில் கொள்ள முடியவில்லை. இது ஒரு துயரம், மனிதகுலத்தின் ஒரு பெரிய முரண்பாடு.

*(தொடரும்)*

**ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை**
**தகவல் மற்றும் தொடர்புக்கு**

For Website: https://www.gururamana.org

For Accommodation: https://stay.gururamana.org

For Parayana: https://parayana.gururamana.org

For Search: https://search.gururamana.org

# ஆதிசங்கரரின் பக்தி -வேதாந்தம்

## டாக்டர் ஏ. வி. ராஜகோபாலன்


### அத்தியாயம் - 4

*நிர்வாண ஷட்கம்*

*‘நிர்வாண ஷட்கம்’ ஆதி சங்கர பகவத்பாதரின் முக்கியமான அத்வைத சித்தாந்த நூல். அளவில் சிறியதான இதில் ஆத்மாவின் நிலை விளக்கப் படுகிறது. ரமணரின் பல கருத்துகள் இந்த நூலுடன் ஒத்துப் போகின்றன. இதற்குப் பின்புலமாக உள்ள ஒரு சிறிய சரித்திரத்தை முதலில் பார்ப்போம்.*

*ஆதிசங்கர பகவத்பாதர், சன்யாச ஆஸ்ரமத்தை ஏற்றவுடன் வடக்கு நோக்கிச் சஞ்சாரம் துவங்குகிறார். கடினமான மலை மற்றும் வனப்பிரதேசங்களைக் கடந்து இன்றைய மத்தியப் பிரதேசத்தில் உள்ள நர்மதா தீரத்தில் ஓம்காரேஸ்வர் என்னும் பகுதியை அடைகிறார். இங்கு நர்மதை ஓம் என்னும் வடிவத்தில் பிரவாகிப்பதால் இதற்கு ஓம்காரேஸ்வர் எனப் பெயர் கிடைத்தது. இன்றும் இந்தப் பிரதேசத்தில் சற்று அச்சமூட்டும் வகையில் ஒரு பக்கம் மலை முடுக்கும் மறு பக்கம் காட்டாறு போலப் பாயும் நர்மதையும் அமைந்துள்ளன.*

*அங்குள்ள குகையில் ஒரு மகான் ஆழ்ந்த தவத்தில் இருக்கிறார். குகை ஒரு பாறாங்கல்லால் மூடப்*



பட்டுள்ளது. அந்த இடத்தை சங்கரர் அடைகிறார். அப்பொழுது நதியில் வெள்ளப் பிரவாகம் ஏற்படுகிறது. அது அந்த மகானின் தவத்தைக் கலைக்காமல் இருக்க அந்த வெள்ளத்தை சங்கரர் தன் கமண்டலத்தில் ஏந்துகிறார். கிட்டத்தட்ட ஒரு மாதம் கழிகிறது. மகான் கண் திறக்கிறார். நடந்ததை அறிகிறார்.

இவர்தான் கௌடபாதரின் சீடர் கோவிந்த பகவத்பாதர்; சங்கரரின் குரு. அவருடைய அத்வைதப் பயணத்தில் முக்கிய பங்காற்றப் போகின்றவர். 'பிரஸ்தானத் த்ரயம்' எனப்படும் பிரம்ம சூத்திரம், உபநிஷதம், மற்றும் கீதை போன்ற கிரந்தங்களுக்குக்கு உலகமே கண்டு வியக்கும் பாஷ்யங்களை எழுதச் சங்கரரைத் தூண்டியவர். இவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில்தான் 'பஜ கோவிந்தம்' என்னும் நூலில் ஈற்றடியில் 'கோவிந்தம் பஜ' என்னும் பிரயோகத்தை சங்கரர் அமைத்தார் என்று சொல்வார்கள்.

கண் விழித்த கோவிந்தபாதர், 'நீ யார்?' என்று கேட்கிறார். அதற்கு சங்கரர் ஆறு சுலோகங்களில் விடை அளிக்கிறார். இது 'நிர்வாண ஷட்கம்' எனப்படும் அத்வைத சாரமான நூல். 'நிர்வாணம்' என்னும் சமஸ்கிருத பதம், கரும பந்தங்கள் விடுபட்ட, சுக–துக்கங்களற்ற பேரின்ப நிலையைக் குறிக்கும். இது 'ஆத்மஷட்கம்' என்றும் அறியப்படும்.


'நீ யார்?' என்னும் கேள்விக்கு, 'நான் இந்தப் பெயரை உடையவன், இந்த இடத்தில் வசிப்பவன், இத்தகைய குண நலங்களை உடையவன்' எனக் கூறுவது மனித இயல்பு. அவ்வாறு கூறுவது ஒரு நிலைக்குள் நம்மை, குறிப்பாக நம் ஆத்மாவை, சுருக்குகிறது. அவ்வாறு இல்லாமல், 'நான் இது இல்லை, அதுவும் இல்லை' என்று எண்ணுவது, பிரம்மத்தை உள்ளே கண்டவர்களின் அனுபவம். இதற்கு 'நேதி நியாயம்' என்று பெயர். இந்த எதிர்மறை நிலை, 'பிரத்யக்ஷ பிரமாணம்' என்னும்

இருத்தலியலுக்கு மாறானது. 'லாஜிக்' எனப்படும் நேர்க் கோடுகளுக்குள் அடைபடாமல், தத்துவ வானில் பறக்கும் பரமாத்ம நிலை. இந்த எதிர்மறையின் மாற்றுப் பரிமாணம்தான் உபநிஷதம் கண்ட 'அணோரணீயான் மகதோமகீயான்' (மிகச் சிறியதை விடச் சிறியது; மிகப் பெரியதினும் பெரியது). "உலகப் பற்று நீங்கியவன் ஆத்மாவைக் காண்கிறான்; அதனால் சோகமற்றவன் ஆகிறான். உள்ளே உறையும் ஆத்மாவின் பெருமையை அறிகிறான்" என்கிறது கடோபநிஷத் (2.20).

ஆனால் இந்த உணர்வு கிட்டுவது மிகக் கடினம். 'நான்' என்னும் உணர்வைப் பற்றி ரமண பகவான் பலமுறை வலியுறுத்தி உள்ளார். இது ஞான விசாரம் என்னும் தொடர் பாதையில் சஞ்சரிக்கும் சாதகனுக்கே கூடும். இதை 'உள்ளது நாற்பது' தெளிவு படுத்துகிறது.

**"உருவம் தான் ஆயின் உலகு பரம் அற்று ஆம்**
**உருவம் தான் அன்றேல் உவற்றின் உருவத்தைக்**
**கண்ணுறுதல் யாவன் எவன் கண்ணலால் காட்சி உண்டோ**
**கண்ணதுதான் அந்தமிலாக் கண்." — (உள்ளது நாற்பது 4)**

"சீவன், தேகமே ஆத்மா என்னும் நிலையில் இருக்கும்வரை இந்த உலகும், அதை ஆளும் இறைவனும் கூட உருவம் படைத்தாக ஆவர். இதுவே ஸ்தூல ரூபம். உருவமற்ற நிலையை அடைந்தபின் அவன் சூக்ஷ்ம ரூபத்தைக் காணத் துவங்குகிறான். 'பார்ப்பது' என்பதை இவ்வாறு இரண்டு நிலைகளாக பகவான் ரமணர் உணர்த்துகிறார். 'கண் அதுதான்' என்று கூறி அதை ஞானக் கண் என்ற நிலையில் 'அந்தமிலாக் கண்'" என விளக்குவார். அடுத்த பாடலில் பஞ்சகோசங்களின் நிலையைப் பார்க்கலாம். இதில் அன்னமய கோசம் உணரக் கூடிய ஸ்தூல வடிவம். பிராணமய கோசம் கண்ணால் பார்க்க முடியாதது; ஆனால் உணரமுடியும். மற்றவை சூக்ஷ்ம வடிவானவை. இந்த முதல் நிலையில், அஞ்ஞானிக்கு தேகமே நான்.



இதைக் கடந்த ஞானிக்கு நான் என்பது எல்லையற்ற ஆன்ம ஒளி. இதுதான் இருவருக்கும் உள்ள பேதம்.

"தன் உணர்ந்தார்க்கு எல்லையறத் தான் ஒளிரு நானிதுவே
இன்னவர்தம் பேதம் என் எண்." — (உள்ளது நாற்பது 17)

இது தன் சுய அநுபவத்தால் மட்டுமே சாத்தியம். 'நான்' என்பது எவ்வாறு ஞானிக்கும் மற்றவருக்கும் வேறுபடுகிறது என்பதை மிகச் சுருக்கமாகக் காட்டுகிறார் ரமண பகவான். இது பின்னால் வரும் நிர்வாண ஷட்கத்திற்கு ஒரு அறிமுகமாக அமைகிறது. நமக்கு உள்ளே இருக்கும் இந்த மமதை நீங்கிய சுடரொளியாகிய நான் என்பது பிரம்மமே.

இதை அறிய முயலும் பாதையில் இடை நிலையில் ஒருவன் எப்படி அதை உணர்வான் என்று கேனோபநிஷத்

*சொல்கிறது. 'அதை அறிந்து கொண்டேன் என்றோ, அறியவில்லை என்றோ நான் உணரவில்லை என்றோ எவன் உணர்கிறானோ, அவனே அதை உணர்வான்'. சற்று குழப்பமான இந்த வரிகளுக்கு முத்தாய்ப்பாக அடுத்த வரி சொல்கிறது, 'அறியப்படாதது பிரம்மம் என்று தெளிபவன், அதை அறிகிறான். அறியப்பட்டது என்று நினைப்பவன் அதை அறிவதில்லை'.*

> ***"யஸ்ய அமதம் தஸ்ய மதம், மதம் தஸ்ய ந வேத ஸ:***
> ***அவிஜ்ஞாதம் விஜானதாம் விஜ்ஞாதம் அவிஜானதாம்"***
> *— (கேனோபநிஷத் 2.3)*

*இது நம் இளம் சங்கரரின் மனோநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அவர் குருவை நாடி வருகிறார். அவர் உள்ளத்தில் அத்வைத வித்து வேரூன்றி விட்டது. அது வளர்ந்து மரமாக குருவின் அருள் தேவை. அந்த நிலையில் 'நீ யார்' என்ற குருவின் கேள்விக்கு நேதி நியாயத்தின் அடிப்படையில் விடை அளிக்கிறார் என்பது பொருத்தமானதே.*

*இந்த ஆறு சுலோகங்களும் மானுடத்தை இருமையின் பிடிப்பிலிருந்து மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு சொல்லக் கூடியவை. பொருள் விளங்க, சற்று மெனக்கெட வேண்டும். பொழிப்புரையைப் பார்த்துப் பொருள் கொள்ள முடியாது; அநுபவத்தாலே உணர இயலும்.*

*முதல் ஐந்து சுலோகங்களில் முதல் மூன்று வரிகளில் நான் அது இல்லை, நான் இதுவும் இல்லை என்று சொல்லி, கடைசி வரியில் (நான்காவது பாதம்), இவற்றையெல்லாம் கடந்த சிதாநந்த ரூபம்; மங்கலவடிவம்; பேரின்ப சொரூபம். அதுவே நான் என்று விளக்குகிறார். (சிதாநந்த ரூப, சிவோஹம் சிவோஹம்). நானே அந்த பரப்ரம்மம் என்பதை வற்புறுத்த சிவோஹம் என்ற சொல்லை இருமுறை பயன்படுத்துகிறார். (சிவ: பரப்ரம்மம்; அஹம்: நான்).*

முதல் இரண்டு சுலோகங்களைப் பார்ப்போம். இதில் 'நான்', நீர்–நெருப்பு–வாயு–ப்ருத்வி–ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆன உடல் இல்லை; கை, கால், கண், காது போன்ற கர்ம ஞானேந்திரியங்கள் இல்லை; தாதுக்கள்–கோசங்கள்–வாயுக்குள் இவற்றின் கட்டினுள் அடங்கும் ஜீவனில்லை; மேற்புலங்களாகிய மனமும், புத்தியும் இல்லை; நம்மை சுற்றியுள்ள அகங்கார–மமகாரமில்லை. இவற்றையெல்லாம் கடந்த சிதாநந்த ரூபம்; — என்னும் விளக்கம் கிடைக்கிறது.

*மனோபுத்யஹங்காரசித்தானி நாஹம் ந ச ஶ்ரோத்ரஜிஹ்வே*
*ந ச க்ராணநேத்ரே*
*ந ச வ்யோம பூமிர்ன தேஜோ ந வாயுஶ் சிதானந்தரூப:*
*ஶிவோஹம் ஶிவோஹம் 1*

*ந ச ப்ராணஸங்க்யோ ந வை பஞ்சவாயுர்ன வாக்*
*ஸப்ததாதுர்ன வா பஞ்சகோஶா:*
*ந வாக்பாணிபாதம் ந சோபஸ்தபாயுஶ்சிதானந்தரூப:*
*ஶிவோஹம் ஶிவோஹம் 2*

இந்த உடல் அழியக் கூடியது. எதுவும் நிரந்தர மில்லை. இந்த உடலுடன் நம்மை ஐக்கியப்படுத்துவது பிழை என்பதை ஞானியர் அறிவர். சிறுவயதிலேயே சங்கரர் இதை உணர்கிறார். இதைத் திருமூலர் அழகாக விளக்குகிறார். "மலர்ச் செடியில் அழகான தளிர் வருகிறது; பின் அது மனதைக் குளிரவைக்கும் மலராக ஆகிறது. ஆனால் அதுவும் சருகாக ஒருநாள் ஆகிவிடும் என்பதை உணராதவர்கள், உயிர் உள்ள போதே இறைவனைத் துதிக்காமல் இருப்பர். யமனின் அழைப்பு வரும் போதும் பரம் பொருளை அறிய மாட்டார்."

*"பிழைப்பு இன்றி எம்பெருமான் அடி ஏத்தார்*
*அழைக்கின்ற போது அறியார் அவர் தாமே" (187)*

இதை, மேலும் வலியுருத்தி அவர் பேசுகிறார். "பட்டாடை அழகானது. ஆனால் அது காலப் போக்கில் கிழியக் கூடியது. அது போலத்தான் நாமும். தலை

முடி கருமையாக இளமையில் இருகிறது. அதற்கு ஏக அலங்காரங்கள் செய்கிறோம். முதுமையில் அது நரைத்துப் போகிறது. வாழ்வு முடியப் போகிறது எனக் கட்டியம் கூறுகிறது. அது போல நம் வாழ்வு மிகச் சிறு பொழுதே" என்கிறார் திருமூலர்.

"கூறும் கருமயிர் வெண்மயிர் ஆவதும்
ஈறும் பிறப்பும் ஓர் ஆண்டு எனும் நீரே" (192)

இத்தகைய அழியக்கூடிய உடலுடன் நம்மை ஐக்கியப் படுத்தாமல் அதைவிட உயர்ந்த நிலையில் நம்மைநாமே உயர்த்திக் கொள்ளுதலே விவேகம்.

மூன்றாவது சுலோகம் ஒரு சந்யாசியின் நிலையை விவரிக்கிறது. அவனுக்கு ஷட் ரிபுக்கள் என்னும் ஆறு எதிரிகள் இல்லை. ஆசா பாசங்கள் அற்ற அவனிடம் லோப மோக, மத மாத்சர்யங்கள் இல்லை. புருஷார்த்தங்களாகிய தர்ம அர்த்த காம மோக்ஷங்களில் அவன் நாட்டமற்றவன். பரம ஆநந்த சிவமயமான சொரூபம் அவன்.

*ந மே த்வேஷராகௌ ந மே லோபமோஹௌ மதோ நைவ*
*மே நைவ மாத்ஸர்யபாவ:*
*ந தர்மோ ந சார்தோ ந காமோ ந மோக்ஷஶ் சிதானந்தரூப:*
*ஶிவோஹம் ஶிவோஹம் 3*

மோக்ஷத்திலும் அவன் ஈடுபாடு அற்றவன் என்பது நோக்கத் தக்கது. முதல் இரண்டு சுலோகங்களில் கண்ட நிலையைத் தாண்டி அதைவிட உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு சங்கரர் பேசுகிறார். இப்பொழுது நான்காவது சுலோகம். கீதையின் ஸ்தித பிரக்ஞன் நிலை இதுதான்.

*ந புண்யம் ந பாபம் ந ஸௌக்யம் ந து:கம் ந மந்த்ரோ ந*
*தீர்த்தம் ந வேதா ந யஜ்ஞா:*
*அஹம் போஜனம் நைவ போஜ்யம் ந போக்தா சிதானந்தரூப:*
*ஶிவோஹம் ஶிவோஹம் 4*

'நான் புண்ணியம்–பாபம், சுகம்–துக்கம் என்ற இருமைகளில் இல்லை. எனக்கு மந்திரங்களோ, புண்ணிய தீர்த்தமோ, வேதங்களோ, வேள்விகளோ தேவையில்லை. நான் பற்றுகளோ, அதனால் வரும் இன்பமோ, அதை அநுபவிப்பவனோ இல்லை'. இந்த வரிகள் ஆழமானவை. கீதையின் சாரத்தை இதில் அமைக்கிறார். பரம ஆநந்த சிவ சாயுஜ்யத்தை அடைந்தவன் பற்றுகளின் கட்டிலிருந்து முழுவதும் விடுபடுகிறான். இனி ஐந்தாம் சுலோகம்.

*ந ம்ருத்யுர்ன ஶங்கா ந மே ஜாதிபேத: பிதா நைவ மே நைவ*
*மாதா ந ஜன்ம*
*ந பந்துர்ன மித்ரம் குருர்னைவ ஶிஷ்யஶ்சிதானந்தரூப:*
*ஶிவோஹம் ஶிவோஹம் 5*

"எனக்கு மரணமில்லை, அதைக் குறித்து எனக்கு அச்சமும் இல்லை. ஜாதி பேதமில்லை. எனக்குத் தாய் தந்தையர் இல்லை. ஏனெனில் எனக்குப் பிறப்பும் இல்லை. உறவினர், பந்து, நண்பன், குரு, சிஷ்யன் என்று எவரும் இல்லை. நான் பரமானந்த சொரூபம்."

மரணம் குறித்து இந்த சமயத்தில் ஒத்த கருத்தை தாயுமானவரின் பராபரக் கண்ணியில் பார்க்கலாம். ஐம்பூதங்களால் ஆன இந்த உடலுக்குத் தமிழில் 'மெய்' என்று பெயர். ஆனால் உண்மையில் பார்த்தால் இது பொய்யானது. ஆனால் இதை மெய் என்று நம்பி அதற்காகப் பாடுபட்டு நிம்மதி இழந்து வாழ்கிறோம். அதுமட்டுமல்ல. மரணம் வந்துவிடுமோ எனும் பேரச்சம் நம்மை ஆட்டிப் படைக்கிறது. இது இரண்டும் எனக்கு இல்லை என்கிறார் ஆதி சங்கரர்.

*பொய்எல்லாம் ஒன்றாய் பொருத்திவைத்த பொய்உடலை*
*மெய்என்றால் மெய்யாய் விடுமோ பராபரமே*
*— பராபரக் கண்ணி 178*

பிறப்பும் இறப்பும் இல்லாத ஆத்மாவைக் குறித்த ஞானம் படைத்த சங்கரர் போன்ற ஒருவரால்தான்

இத்தகைய கருத்தை முன்வைக்க முடியும். பெற்றோர், பந்து என்னும் உறவுகள் நீங்கி, மரண பயமற்று வாழும் உயர் வாழ்வே ஆனந்த மயமானது. அதை மொழிகிறார் இந்த சுலோகத்தில்.

அடுத்துவரும் கடைசி சுலோகத்தில் இந்த 'நேதி' என்னும் எதிர்மறை நிலையின் ஒரு முடிவான விளக்கம் வருகிறது. 'நான் மாறுதல்கள் அற்றவன். எனக்கு உருவம் இல்லை. எங்கும் இருப்பவன். எல்லா புலன்களிலும் வியாபித்திருப்பவன். பற்று, அதனின்றும் விடுதலை என்னும் நிலைகளைக் கடந்தவன். சிதானந்த ரூபமான சிவன் நானே, சிவன் நானே.'

*அஹம் நிர்விகல்போ நிராகாரரூபோ விபுத்வாஞ்ச ஸர்வத்ர ஸர்வேந்த்ரியாணாம்*
*ந சாஸங்கதம் நைவ முக்திர்ன மேயஶ்சிதானந்தரூப: ஶிவோஹம் ஶிவோஹம் 6*

இந்த 'நான் இவை யாவும் இல்லை' என்னும் நேதி நியாயத்தின் நேர்மறை வடிவம்தான் பாரதியின் 'நான்' என்னும் பாடல். நான் எங்கும் வியாபித்து எல்லா வடிவிலும் இருக்கிறேன் என்பது, நான் எதிலும் இல்லை என்பதின் அத்வைத விரிவாகவே கொள்ளலாம். இதையே பகவத்பாதர் 'ஸர்வத்ர ஸர்வேந்த்ரியாணாம்' என மேற்கண்ட சுலோகத்தில் சொல்வார்.

*வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்*
*மண்ணில் திரியும் விலங்கெலாம் நான*
*கானிழல் வளரும் மரமெலாம்நான்*
*காற்றும் புனலும் கடலுமே நான் (1)*

*விண்ணில் தெரிகின்ற மீனெலாம்நான்*
*வெட்ட வெளியின் விரிவெலாம்நான்*
*மண்ணில் கிடக்கும் புழுவெலாம்நான்*
*வாரியிலுள்ள உயிரெலாம்நான். (2)*

உலகிலுள்ள விலங்கு, பறவை, மரம் செடி, கொடி அனைத்துமே நான். "இயற்கை சக்திகளாகிய காற்று, நீர் அதுவும் நானே. ஆகாயமும், கோள்களும், இந்த அண்ட சண்டாரமும் நானே" என்னும் பாரதியின் கூற்று சங்கரரின் நேதி நியாயத்திற்கு மாறுபட்டதல்ல. சீவாத்மா, ஞானத்தைப் பெற்ற நிலையில் நான் பௌதிக வஸ்து எதுவும் இல்லை என உணர்வு பெறுகிறது. அதுவே பரமாத்ம சொரூபமாக விரிவடையும் பொழுது அகில உலகமும் நானே என உணர்கிறது. முத்தாய்ப்பாக பாரதி 'நான்' என்பதற்கு நெற்றியடியாய் ஒரு விளக்கம் சொல்வார்.

நானெனும் பொய்யை நடத்துவோன் நான்
ஞானச் சுடர்வானில் செல்லுவோன்நான்
ஆன பொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்
அறிவாய் விளங்கு முதற்சோதிநான். (7)

இதில் குறிப்பாக ஆறாம் சுலோகத்தின் விளக்கம் கிடைக்கிறது.

கண்ணன் கீதையின் பதிமூன்றாம் அத்தியாயத்தில் 'க்ஷேத்ரம் (உடல்)' மற்றும் 'க்ஷேத்ரக்ஞன் (உடலை அறிந்தவன்)' என்ற இவைகளுக்குள் உள்ள தொடர்பைத் தெளிவு படுத்துகிறார். அதன் விரிவாக்கமே இந்த நூல் என்று கொள்ளலாம்.

அத்வைத சமுத்திரத்தில் முத்தெடுக்கும் சிறப்புப் பணியாக நிர்வாண சதகம் அமைந்துள்ளது.

(தொடரும்)







# ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு நினைவு நாணயம்

*ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக, இந்திய அரசு ஒரு சிறப்பு நினைவு நாணயத்தை வெளியிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.*

*2025 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் தேதி, இந்திய அரசாங்கம் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில், ₹100 மதிப்புள்ள ஒரு நினைவு நாணயத்தை அதிகாரப்பூர்வமாக வெளியிடுவதாக அறிவித்தது. இந்த நாணயம் 99.9% தூய்மையான வெள்ளியில் அச்சிடப்பட்டுள்ளது. இதன் எடை 40 கிராம் மற்றும் விட்டம் 44 மில்லிமீட்டர் ஆகும். அன்றாடப் புழக்கத்தில் உள்ள நாணயங்களில் இருந்து வேறுபட்டு, இது நாணயவியல் (Numismatic) பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.*

*மேலும் விவரங்களுக்கு, காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும் அல்லது மாலை 2 மணி முதல் 6 மணி வரையிலும் ஆஸ்ரம புத்தகாலயத்தையோ அல்லது ஆஸ்ரம அலுவலகத்தையோ அணுகவும். bookstall@gururamana.org என்ற மின்னஞ்சல் முகவரியையும் தொடர்பு கொள்ளலாம்.*

# ரமண புராணம்

## விளக்கம் விளங்கியவண்ணம்
## தொடர்வது 'ஆகுரா'

### ரமண புராணம் வரிகள் (131–144)

*வஞ்சிப் போர் மாலை வனைந்து ஏற்ற மாற்றாரை*
*விஞ்சித் தார் வாகை புனை வீரட்டன் தாள் வெல்க*
*நட்டார்க்குத் தோற்றலை நாணாப் பெருங்குணத்தோன்*
*மட்டார்க்குஞ் செந்தாமரைப் பூங் கழல் வெல்க* 134
*ஏயவிளமக்கள் இதயத்து மெய்யன்பு*
*மேய விதம் நோக்கி வியப்பித்து வெம்பாசம்*
*தட்கும் திருச்சந்நிதானத்தில் என் அகந்தை*
*வெட்கும் பரிசாண்டோன் வீரக் கழல் வெல்க* 138
*காதாருங் கேள்வியார் காமுற்றுத் தன் அடிச்சீர்*
*ஓதா நின்றார்கட்கு உறுதியோன் தாள் வெல்க* 140
*பிங்கல மேனிப் பெருமான் பொலிக என*
*மங்கல வாசகர் வாழ்த்துவோன் தாள் வெல்க*
*வாழ்த்துநரை வானோரால் வாழ்துவிப்போனாகி அவர்*
*பாழ்த்த நரலைப் பிறவி பாற்றுவோன் தாள் வெல்க* 144

*** *** ***

*வஞ்சிப் போர் மாலை வனைந்து ஏற்ற மாற்றாரை*
*விஞ்சித் தார் வாகை புனை வீரட்டன் தாள் வெல்க* 132

**பதவுரை:**

*வஞ்சிப் போர் மாலை* – மாற்றுப் பகையை போருக்கு அழைக்க வஞ்சிப் பூ மாலை அணிந்து கொள்ளுதல் வழக்கு; *வனைந்து* – வனைதல் என்றால் அலங்கரித்தல்; *ஏற்ற* – ஏற்றுக்கொண்ட; *மாற்றார்* – மாற்றுப் பகைவர், தன்னை அல்லாது பிறர்; *விஞ்சி* – வெற்றி பெற்று; *தார் வாகை* – வாகை தார், வாகைப் பூ மாலை, வெற்றிக்குப் பின்னர் கழுத்தில் அணியும்

பூ மாலை; புனை – புனைதல் என்றால் அணிதல்; வீரட்டன் – எப்பகையையும் வேரோட அழிக்க வல்ல வீர தீரனாகிய; சிவன் (ஆத்மன்) – அத்தகைய சிவபிரான் பகை வென்ற எட்டுத் தலங்கள் அஷ்ட வீர ஸ்தலங்கள் ஆகும்; தாள் வெல்க – திருவடிகள் வெல்க.

விளக்கம்:

வஞ்சிப் பூவைச் சூடி எதிராளிகளைப் போருக்கு அழைத்தல் வழக்கு. அப்படியாக வஞ்சிப் பூவை நன்கு அலங்கரித்து மாலையாக சூடி போருக்கு அழைக்கும் மாற்றாரை, போரில் வென்று தான் வெற்றி அடைந்ததற்கு அடையாளமாக வாகை மாலையை கழுத்தில் அணிந்து கொள்ளும் வீர தீரனின் பாதங்கள் வெல்க!.

வீரட்டன் என்பது சிவபெருமானைக் குறித்ததாகும். சிவபிரான் அங்ஙனம் வெற்றிகொண்ட ஸ்தலங்கள் அஷ்ட வீரட்டானம் எனப்படும். வீரட்டானம் என்றால் வீரத் தலங்கள்.

அஷ்ட வீரட்டானங்கள்

அஷ்ட வீரட்டானங்கள் என்பவை சிவனது வீரச் செயல்களை நினைவுபடுத்தும் எட்டு சிவஸ்தலங்கள் ஆகும். இவை அனைத்திலும் சிவன் வெற்றி கொண்டு அழித்தல் என்பது அகந்தை ஒன்றையே.

1. திருக்கண்டியூர் 2. திருக்கோவிலூர் 3. திருவதிகை, 4. திருப்பறியலூர், 5. திருவிற்குடி, 6. திருவாலவாய், 7. திருக்குறுக்கை, 8. திருக்கடையூர்.

இங்கு மாற்றார் எனப் படுவது, தனக்கு அயலாக உள்ளவர். ஆன்மாவிற்கு அந்நியமாக, அயலாக உள்ளது அகந்தை ஒன்றே. ஆன்ம நாட்டம் உள்ள ஜீவர்கள் கடைத்தேற குறுக்கே இருப்பது அகந்தை எனும் மாயைதான். இந்த அகந்தையை ஜீவாத்மாவினால்

அழிக்க முடியாது. இயலாமை என்னும் தளர்வினை தனது பயிற்சிகளால் அடைந்த ஜீவாத்மா தனது வெளியில் உள்ள குருவிடம் சரண் அடைய வேண்டும். அந்த ஸ்திதியில் குரு தடையாக உள்ள அகந்தையை அழித்து சரணாகதி அளிப்பார். இந்த நிலையில் ஜீவ, ஆத்ம ஐக்கியம் நடைபெறும். ஜீவாத்மாவுக்கு தடையாக உள்ள அகந்தை சகல விதத்திலும் தன்னை அலங்கரித்து எதிராடும் போது ஆன்ம சக்தி அதை அழித்தல் என்பது வீரட்டனின் தீரம். இங்கு ஜீவ அகந்தை அதாவது உயிர் அகந்தை அழிந்து ஆன்ம நிலை அடைதல் என்பதே நிகழ்வு. சாதாரண போர்களில் எதிரியின் உடல் அழிதல் நிகழலாம். இங்கு உயிர் அகந்தை அழிந்து மாற்றான் என்பதே இன்றி இரண்டு அற கலத்தல் நிகழ்கிறது.

உடல் அழிதல் உரு அழிதல்

ஜீவன் என்றாலே உயிர் உள்ளது. உயிர் உள்ளது என்றாலே உடம்பு இருப்பதாலேயே அறியப்படுகிறது. இந்த உடலுடன் கூடிய அகந்தையே உயிர் அகந்தை எனப்படும்.

உயிர் அகந்தை ஒரு உடலை கொண்டே இருக்கும். இந்த உடல் போனால் வேறு உடல் (வேறு பிறவி எடுக்கும்). ஜனனம் மரணம் மீண்டும் ஜனனம் என்ற பிறவிச் சுழற்சி இப்படியாகவே நடக்கிறது என்பது ஆன்றோர் கருத்து. இந்த பிறப்பு அறுபட அகந்தை அழிந்து ஆன்மாவில் நிலைத்தல் ஒன்றே வழி. ஆன்ம நிலை இரண்டற்ற நிலையாகும். இதுவே ஒவ்வொரு உயிர்களுக்கும் ஆன உண்மை நிலை. இந்த ஆத்மாவில் இருந்து பொய்யாக எழுவதே உடம்பை நான் என்று பாவித்து எழும் அகந்தை. மீண்டும் இந்த பொய்த்தோற்றம் ஆன்மாவில் ஒடுங்குவது என்பது ஜீவாத்மாவினால் முடியாது. பரமாத்மாவே இதற்கு அருளி உதவும்.

சாதாரண மரணம் என்பது உடல் அழிதல். இந்த உடல் அழிதல் என்பது மீண்டும் உடல் எடுக்கும் செயல். உரு அழித்தல் என்பது அகந்தை அழிந்து ஆன்மாவில் நிலைத்தல்.

மீண்டும் பிறவி உண்டாகாது. உரு அழிதலே முக்தி. மேலே குறிப்பிட்ட வீரட்டனின் வாகைப் பூ மாலை சூடிய வெற்றி என்பது பக்குவிகளின் உரு அழித்தல் என்பதே.

நட்டார்க்குத் தோற்றலை நாணாப் பெருங்குணத்தோன்
மட்டார்க்குஞ் செந்தாமரைப் பூங் கழல் வெல்க 134

**பத உரை:**

நட்டார்க்கு – நண்பர்களுக்கு; தோற்றலை – தோற்றுப்போவதை நாணாப் பெருங்குணம்; வெட்கம் கொள்ளாது – புறச் சூழல்கள் எதையும் பற்றி கவலைப்படாது; மட்டார்க்கும் – எளியவர்களுக்கும், மட்டு என்றால் குறுகிய அளவைக் குறிக்கும். செந்தாமரைப் பூ – சிகப்பு நிற தாமரைப் பூ; கழல் – பாதங்கள்.

நட்டார்க்கு தோற்றலை நாணாப் பெருங்குணம்

கலித்தொகை

சங்க காலத் தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாகும். பல புலவர்களின் பாடல்கள் அடங்கிய தொகுப்பு. சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று உட்பட பாடப்பட்ட 150 பாடல்கள் கொண்டது கலித்தொகை.

அகப்பொருள் துறை பாட ஏற்ற யாப்பு வடிவங்களாக கலிப்பாவையும் பரிபாடலையும் தொல்காப்பியர் கூறுகிறார். துள்ளலோசையால் பாடப்பட்டு பாவகையால் பெயர்பெற்ற நூல் கலித்தொகை ஆகும். பிற அகத்திணை நூல்கள் எடுத்துரைக்காத கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் ஆகியவை

கலித்தொகையில் மட்டுமே இடம்பெறுகின்றன. கலித்தொகை காதலர்தம் அகத்தொகை எனவும் கூறலாம். இப்பாடல்களின் மூலம் பண்டைக் கால ஒழுக்க வழக்கங்கள், நிகழ்ச்சிகள், மரபுகள், காலத்தின் தன்மை, நல்லவர், தீயவர் பண்புகள், விலங்குகள், பறவைகள், மரங்கள், செடி கொடிகளின் இயல்புகள் ஆகியனவற்றை அறிந்து கொள்ளலாம்.

கலித்தொகை பாடல் 43. இதில் தலைவனின் தன்மை என்ன என்பதாக இவ்வரிகள் இடம் பெற்றுள்ளன.

"தகையவர் கைச் செறித்த தாள்போல, காந்தள்
முகையின்மேல் தும்பி இருக்கும் பகை எனின்,
கூற்றம் வரினும் தொலையான், தன் நட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் குன்று"

தகைமை உடையோர் கையில் இருக்கும் 'தாள்' என்னும் மோதிரம் போலக் காந்தள் மொட்டில் வண்டு அமர்ந்திருக்கும் நாட்டை உடையவன் நம் தலைவன். பகை என்றால், கூற்றுவனே எதிர்த்து நின்றாலும் தொலைப்பவன் அவன். தன் நண்பர்களிடம் தோற்றுப் போவதற்கு நாணம் கொள்ளாதவன் என்பதாக தலைவன் தன்மை கூறப்படுகிறது. ரமண புராணத்தில் ஆத்மன் ஆகிய சிவ ரமணனின் இயல்பாக, அன்பர்களிடம் தோற்றலை வெட்கப்படாது ஏற்கும் பெரும் குணத்தோன் எனப் பேசப்படுகிறது.

மட்டார்க்கும் செந்தாமரைப் பூங்கழல் என்பதானது என்ன என்று பார்ப்போம். மட்டார் என்பது எளிமையானவர் என்று பொருள் படும்.

இங்கு இராமலிங்க அடிகளின் வரிகள் நினைவுக்கு வருகின்றன. மட்டார் என்பதே மாட்டார் என்பதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

"வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே"

"மாட்டார்க்கும்" என்பது வள்ளலார் அருட்பிரகாசரின் திருவருட் பாவில் இடம்பெறும் ஒரு வரியின் பகுதியாகும். இந்தப் பாடலில், வல்லார்க்கும், அதாவது சக்தி வல்லமை உடையவர்களுக்கும், மாட்டார்க்கும், அதாவது சக்தி குறைந்த எளியவர்களுக்கும் அருள் அளிப்பவன் இறைவன். பாரபட்சம் அற்றவன். அவனே நடு நின்ற நடு. செந்தாமரைப் பூங்கழல் என்பது தாமரை மலர் போன்ற அழகும், தூய்மையும் கொண்ட இறைவனின் பாதங்கள். மட்டார்க்கும் அருளும் அம்மலர்ப் பாதங்கள் வெல்லட்டும்.

ஏயவிளமக்கள் இதயத்து மெய்யன்பு
மேய விதம் நோக்கி வியப்பித்து வெம்பாசம்
தட்கும் திருச்சந்நிதானத்தில் என் அகந்தை
வெட்கும் பரிசாண்டோன் வீரக் கழல் வெல்க 138

பதவுரை

ஏயவிளமக்கள் ஏய – ஓர் உவமவுருபு, பொருந்து, தகு. ஒத்திரு, சந்தி; உவம உருபு என்பது, உவமை அணி அல்லது உவமைக் கருத்தை உருவாக்கும் போது, உவமேயத்தையும் (விளக்கப்படும் பொருள்) உவமானத்தையும் (விளக்கப் பயன்படும் பொருள்) இணைக்கப் பயன்படும் ஒரு சொல் ஆகும்; இளமக்கள் – இளம் நிலையில் உள்ள மக்கள், இங்கு ஆன்மிக நாட்டம் கொண்ட ஆரம்ப நிலை சாதகர்; இதயத்து மெய்யன்பு –இதயத்தில் மெய் அன்பு; மேய விதம் நோக்கி – அமைப்பு முறை நோக்கி; வியப்பித்து – வியக்கவைத்து; வெம்பாசம் – கொடிய கேடுவிளைவிக்கும் பற்று; தட்கும் – தடுக்கும்; திருச்சந்நிதானம் – சந்நிதி என்பது பொதுவாக குருவோ இறைவனோ உறைவதாகக் கொள்ளப்படும் இடம்; என் அகந்தை வெட்கும் – எனது அகந்தை நாணித் தலை சாயும், அகந்தை பணியும் அல்லது ஒடுங்கும்; பரிசு ஆண்டான் – ஆன்ம நிலையில் சேர்த்து



ஆண்டுகொண்டவன்; வீரக் கழல் – அகந்தையை வெற்றி கொண்ட பாதங்கள்.

**விளக்கவுரை**

மேய விதம் நோக்கி

"மேய விதம் நோக்கி" என்ற தொடர் தொல்காப்பியத்தில் அகத்திணை இயலில் உள்ள ஒரு பாடலின் தொடக்கமாகும். இது, தெய்வங்களின் தன்மையைப் பொறுத்து அந்தந்த நிலங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. குறிப்பாக, திருமால் (மாயோன்) காடுறை உலகத்திலும், முருகன் மலை உலகத்திலும், இந்திரன் வயல் உலகத்திலும், வருணன் மணல் உலகத்திலும் நிலைத்து வாழ்வதைக் கூறி, இந்தத் தெய்வங்கள் மேயும் உலகத்தைப் பின்பற்றி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற

வரிசையில் நிலங்கள் சொல்லப்பட வேண்டும் என்று இந்தத் தொடர் வலியுறுத்துகிறது.

மாயோன் மேய காடு என்ற வரிசையில் தொடங்கி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று சொல்லப்படும் முறையையே இந்தத் தொடர் சுட்டிக்காட்டுகிறது.

இங்கு இதயத்தை மெய்யன்பு என்றாக மேயும் முறை குறிப்பிடப் பட்டுள்ளது.

தீப தரிசன தத்துவத்தில் பகவான் ரமணர் கூறுவது நினைவுகூறத்தக்கது.

"இத்தனுவே நான் ஆம் எனும் மதியை நீத்து
அப்புத்தி இதயத்தே பொருந்தி அக நோக்கால்
அத்துவிதமாம் மெய் அகச்சுடர் காண்கை
பூ மத்தி எனும் அண்ணாமலைச் சுடர் காண் மெய்யே"

தகுந்த இளம் சாதகர்களுக்கு உள்ள பொருளான மெய்யன்பு பொருந்திய விதத்தை பகவான் காண வைக்கிறார் அந்த அற்புதக் காட்சி அவர்களுக்கு காட்டி அவர்களை வியப்பில் ஆழ்த்துகிறார். அந்த ஆத்ம திருச்சந்நிதியில் சாதகர்களின் கொடிய தீமை பயக்கும் பற்று அறுபடுகிறது. அந்த சந்நிதி இரண்டற்ற இடம். பேதமாகிய அகந்தை அழிந்த இடம். எனவே பற்றுவதற்கு அந்நியமாக எதுவும் இல்லை.

உள்முகம் திரும்புவது, அகந்தையை அதன் மூலத்தில் ஒடுக்குதல் ஆகிய இவை எதுவும் ஜீவபோதம் உள்ள ஜீவர்களால் செய்ய இயலாது குரு அருள் ஒன்றே அதை செய்விக்கும் பற்றுக்களை அறுத்து, உள்முகம் திருப்ப வைத்து தன்மயம் பரிசாக கொடுத்து ஆண்டு கொள்பவன் சிவரமணன். அவனது வீரக் கழல்கள் வெல்லட்டும்!

காதாருங் கேள்வியார் காமுற்றுத் தன் அடிச்சீர்
ஓதா நின்றார்கட்கு உறுதியோன் தாள் வெல்க

*பதவுரை*

*காதாருங் கேள்வியார் – காது குளிரக் கேட்டல்; காமுற்று – ஆசைப்பட்டு; தன் அடிச்சீர் – தனது திருவடிகளின் சிறப்பு; ஓதா நின்றார்க்கு – வாசிக்காது நின்றவர்களுக்கு. “ஓதா” என்றால் ஓதாமல். “நிற்றல்” என்பது நிலைத்து நிற்றல்.*

*எனவே, ஓதா நிற்றல் என்பது வாயடைத்துப் போய், அகத் தூண்டுதல் அல்லது உள்ளொளி மூலம் மெய்ம்மையை உணர்தலை குறிக்கிறது. உறுதியோன் – (வீடு பேறு) உறுதியாக அளிப்பவன்.*

*விளக்கவுரை*

*தன் சீர்மிகு திருவடியின் புகழைக் காது குளிரக்கேட்டு, காதல் மேலிட்டு, அன்பர்கள் வாயடைத்துப் போய் நிற்கிறார்கள். ஆதலால் சீர்மிகுந்த திருவடிகளின் புகழை ஓத மறந்தார்கள். அங்கனம் மெய்மறந்த அன்பர்களுக்கு வீடு பேற்றை உறுதியாக அளிப்பவனின் பாதங்களைப் போற்றுவோம்.*

*இங்கு பகவான் அருளிய அக்ஷரமணமாலையில்*

*“அன்போடு உன் நாமம் கேள் அன்பர்தம் அன்பருக்கு*
*அன்பனாயிட அருள் அருணாசலா”*

*என்று அருணாசலனின் நாமம் கேட்பவர்களை உயர்த்தி உள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.*

*பிங்கல மேனிப் பெருமான் பொலிக என*
*மங்கல வாசகர் வாழ்த்துவோன் தாள் வெல்க*

*பதவுரை*

*பிங்கல மேனி – பொன்னிற வடிவம்; பொலிக – இது “வளர்க”, “செழிக்க” போன்ற சொற்களை ஒத்த பொருளைக் கொண்டது. ஒரு செயலோ அல்லது ஒருவரையோ சிறந்து விளங்க வாழ்த்தும் போது பயன்படுத்தப்படுகிறது. வாசகர் – நல்ல குணவான்கள், நல்ல சுபமான வாக்கு கொண்டு வாழ்த்துபவர்.*

*விளக்கவுரை*

*பொன்னிற மேனி கொண்டவனே அழகுடன் விளங்குக என, மங்கலமான வாக்கு உடையோரால் வாழ்த்தப்படுவோன். சிவரமணன். அவனுடைய திருவடி வெல்க!*

*வாழ்த்துனரை வானோரால் வாழ்துவிப்போனாகி அவர்*
*பாழ்த்த நரலைப் பிறவி பாற்றுவோன் தாள் வெல்க! 144*

*பதவுரை*

*பாழ்த்த – பாழ்த்தல் என்னும் சொல்லில் இருந்து வந்தது. பாழ்த்தல் என்றால் வீணாதல். பாழ்த்த என்பது வீணான என்பதாகும்; நரல் – நரன் என்றால் மனிதன் நரல் என்பது மனிதப் பிறப்பு என்றாகும். பாற்றுவோன் – நீக்குவோன்.*

*விளக்கவுரை*

*அருணாசலனை வாழ்த்திடும்போது – அருணாசல சிவ. ரமணனை வாழ்த்துவோர் – நமோ ரமணாய நலம் பெற வாழ்க! விமோசன மெய்யன் விரை மலர்த்தாள் வாழ்க!*

*சிவபெருமானை – நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க; நாராயணனை – நமோ நாராயணா;*

*இறைவனிடத்தில் தனது என்று ஒன்றும் இன்றி ஒப்புவித்த உள்ளத்தால், எப்பொழுதும் வாழ்த்தும் பக்தகோடிகள் இங்கு வாழ்த்துவோர் என்று குறிப்பிடப்படுகிறார்கள். அத்தகைய வாழ்த்துபவரை தேவர்களைக் கொண்டு சிவரமணன் வாழ்த்துவிப்பான். அதுமட்டுமல்ல அவர்களுக்கு இனி பிறவி இன்றி செய்வான். பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன். இனி அவர்களுக்கு இந்த வீணான உடல் இராது. அவர்களின் அகந்தையை நீக்கிவிடுவோனின் பாதங்கள் வெல்லட்டும்!*

*(தொடரும் இந்த ரமண புராணம் ஆதல்)*

# தட்சிணாமூர்த்தி தோத்திரம்

## சிதம்பர குற்றாலம்

பாடல் 9


உலகையார் இப்புமான் நோக்குறும் பலநனாக் கனாவில்
கலங்கியே மாயையாலே காரிய காரணம் பின்
தலைவனும் தாசன்சீடன் குருமகன் தந்தை யாதி
தலமுறு குருவாம் அந்தத் தட்சிணாமூர்த்தி போற்றி.

காரணகாரியத் தன்மையோடும், பின் தலைவன் –சேவகன், குரு–சீடன், தந்தை–மகன் என மாயையில் கலந்து நனவிலும் பலவாறாகக் காண்பவன் எவனோ, அவனே பேதங்களுக்கும் ஆதாரமானவன். அவனே உலகக் குருவாம் தென்முகக் கடவுளும். அவனுக்கு வணக்கம்.

காரணமில்லாமல் உலகில் எந்தக் காரியமும் நிகழ்வதில்லை. காரணத்தோடு மாயையைப் படைத்த உலகுதான் காரியம். காரணமே காரியத்திற்கு அடிப்படை. அதுபோல காரியமும் காரணத்திற்கு அடிப்படை. காரணமில்லாமல் காரியமில்லை, காரியமில்லாமல் காரணமில்லை.

மரத்திற்கு காரணம் – விதை
மரமே விதைக்கும் காரணமாகிறது
பிறப்பிற்குக் காரணம் கர்மம் – ஆனால்
பிறப்பே கர்மத்திற்கும் காரணமாகிறது

மரம் உருவாவதற்கு விதை காரணமாக உள்ளது. ஆனால் அதே மரம் மீண்டும் விதையில் ஒடுங்கி விதை உருவாவதற்கு காரணமாகிறது. அதுபோல கருமமே பிறப்பிற்குக் காரணமாகிறது. பிறப்பே மீண்டும் கருமம் உருவாவதற்கும் காரணமாகிறது. பிறப்பில்லாமல் கருமம் இல்லை, கருமம் இல்லாமல் பிறப்பில்லை. இது இரட்டையாகத் தோன்றினாலும்,



இரண்டிலும் பொதுவாக இருப்பது காரணம் என்கிற ஏகமே. காரணமே காரியம், காரியமே காரணம். இரண்டும் ஒன்றுதான். "காரணகாரிய விதிக்குடபட்ட அனைத்தும் நிலையற்றவையாகவே உள்ளன. இவ்வாறு இருக்கும் மாறக்கூடிய எல்லாவற்றையும் மறுப்பதன் மூலம் ஒருவன் மாற்றமில்லாத மரணமில்லாத ஒன்றை அடைகிறான்" என்கிறார் புத்தர்.

"காரணகாரியங்கள் ஏகம் அதைக்கண்டு
தெளிவதே விவேகம்" – (அத்வைத கீதம்)

அனுபவம் வரும்பொழுது காரணகாரியங்கள் ஏகமாகி படைப்பின் நோக்கம் தெளிவாகும். மாயையின் மறைப்பினாலேயே ஜீவன் உருவாகிறது. அதுவே பின் தந்தை மகனாக, தலைவன் தாசனாக, குரு சீடனாக

விரிவடைகிறது. இவ்வாறு பலவித பேதங்களோடு இவ்வுலகம் விரிந்தாலும் அடிப்படை ஆதாரமான ஆத்மாவிற்கு வேறானதல்ல. பொன்னும் ஆபரணமும் போல, பேதங்களின் ஊடாக மறைந்துள்ள பேதமில்லா அந்த மெய்ப்பொருளைக் காணும்பொழுது பேதப் பொருள்களும் ஆத்மாதான் எனத் தெளிவடைகிறான். மனநிலையில் ஒன்றைப் பலவாகக் கண்டது, சித்தாக மாறியபின் பலவற்றில் ஒன்றைக் காண்கிறது" என்கிறது யோக வாசிஸ்டம்.

ஒப்பு

*உலகு உண்மையாகும் உணர்வு இல்லார்க்கு உள்ளாற்கு*
*உலகளவாம் உண்மை உணரார்க்கு உலகினுக்கு*
*ஆதரமாய் உருஅற்று யாரும்உணர்ந்தால் உண்மை*
*ஈதுஆகும் பேதம்இவர்க்கு எண். – (உள்ளது நாற்பது 18)*

உண்மையை அறிந்தவருக்கும், அறியாதவருக்கும் உலகு உண்மைதான். அறியாதவருக்கு உண்மை உலகளவுதான். பருப்பொருளே அவனுக்குக் காட்சியாவதால் காணும் உலகையே உண்மை என எண்ணுகிறான். அவனது சிற்றறிவால் பேரறிவை அறிய முடியவில்லை. ஆனால் அறிந்தவன் காட்சிப்பொருளைக் கடந்து அதற்கு ஆதாரமான உருவமற்ற அந்த ஏகமே எங்கும் இருப்பதை அறிகிறான்.

"உலகைப்பற்றிய அறிவே மாயை ஆகும். மாயைக்கு அப்பால் மாயையினால் கட்டுப்படுத்த முடியாத ஒன்றை வேதாந்தம் காண்கிறது. அதை அடைந்த பின்னர் மனிதன் மாயையின் தளைகளிலிருந்து விடுபடுகிறான். அப்பொழுது உண்மையான விடுதலையை அடைகிறான்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஒப்பு

*"துக்கம் சுகமான சுட்டறிவு கெட்டவர்க்குத்*
*திக்குண்டோ எங்கும் சிவாலயமாம்"*

*(ஒழிவில் ஒடுக்கம் 182)*

சுக துக்கம் போன்ற இருவினைகளால் சேர்ந்த புற அறிவை அழித்து சமநிலையில் நிர்மலமாக இருக்கும் ஞானிகளுக்கு குறிப்பிட்ட திக்கென்று இல்லாமல் காணும் இடமெல்லாம் சிவாலயந்தான். காட்சியெல்லாம் கடவுளாகவே அமைகிறது. “சடமான தேகத்திற்கும், சைதன்யமான ஆன்மாவிற்கும் சுக துக்கமில்லை” என்கிறது ஞானவாசிஸ்டம். “சச்சிதானந்த சொரூபமான பூரணத்தை, (பிரம்மத்தைப்) பார்த்து விட்டால் தானாக மெள்ள மெள்ள நாமரூபங்களை கவனிக்காமல் இருந்து விடுவார்கள்” என்கிறது பஞ்சதசி.

பேதப் பொருள்களின் ஊடாகப் பரவியுள்ள பரம்பொருளை அறிந்து உயிர்கள் உயர்வடைய வேண்டுமென்பதுதான் படைப்பிற்கான காரணம். அதற்கான காரியமே உலகம் படைப்பு.

பேதங்கள் இருப்பதாலேயே ஏன்? என்ற கேள்வி வருகிறது. பேதங்களே அஞ்ஞானத்தைப் போக்குவதற்கான ஞான வேள்வியான விசாரம் எழுமிடமாக உள்ளது. “பேதமற்றதை உணர்வதற்கே இத்தனைப் பேதங்கள்” என்பது பகவான் கருத்து.

“கணவன் மனைவியைக் காதலிப்பதும், மனைவி கணவனைக் காதலிப்பதும், காதலிப்பதற்காக இல்லை, உள்ளே உள்ள ஆத்மாவைக் காதலிப்பதற்கான பயிற்சியே அது. மக்களிடம் உள்ளங்கரைவதற்கும் அதுவே காரணம். கணவன், மனைவி, மக்கள் இவைகளில் பரவி நிற்கும் பரம்பொருளை காதலித்து அதனுடன் கலந்து ஒன்றாவதற்கு உள்ளம் பொங்கவேண்டும். அவர்களைக் காதலித்து அனுபவித்து வாழ்வதின் நோக்கமே இந்த பயிற்சியை பெருவதற்குத்தான். அதுவே அதன் உண்மை பயன்” என்கிறார் யாக்ஞவல்கியர், பிருஹதாரண்ய உபநிடதத்தில்.

“ஆருயிர்களுக்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும்” என்கிறார் வள்ளல் பகவான். உலகத்தோற்றமே உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி ஒடுங்குவதற்குத்தான்.

ஒப்பு

*ஒரு காலத்தில் நான் பெண்ணாகவும்*
*அவன் ஆணாகவும் இருந்தோம்*
*அன்பு வளர்ந்தது*
*இறுதியில் அவனுமில்லை, நானுமில்லை*
*ஒருகாலத்தில் இருவராக இருந்தோம் என்று*
*மங்கிய நினைவு மட்டும் கொஞ்சம் இருக்கிறது*
*இருவருக்கிடையில் அன்பு வந்தது*
*இருவரையும் ஒன்றாக்கி விட்டது. (சூபிப் பாடல்)*

இருவராய் இருந்து காதலித்து அன்பு வளர்த்து உள்ளதை உணர்ந்து ஒன்றாவதுதான் அன்பின் உச்சநிலை. அன்பே சிவமென்று திருமூலர் சொல்வது இந்த ஏகநிலையைத்தான். அன்பு சுயத்திலிருந்து வேறானதல்ல. அன்பே சுயம், சுயமே கடவுள் என்கிறார் பகவான். ஏகமான அவனே உலகை ஆத்மாவாகவும் காண்கிறான். “குற்றமில்லா மௌனம் வந்தமையும் அந்த ஏகநிலையே பரிபூரணம். அதுவே ஆனந்தத்தை வாரிவழங்கும்” என்கிறரர் தாயுமானவர். உலகப் படைப்பின் நோக்கம் இதுதான். அந்நியமான பொருள் எதுவும் இல்லை.

(தொடரும்)



# பகவானின் அணுக்கத் தொண்டர் டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு

**தமிழில்: மா. முருகேசன்**

*இரவு நேரத்தில் புதிய மண்டபம்*

*ஒவ்வொரு நாளும் கூடுகின்ற பகவானின் திருச்சபை குழாத்தில் இப்பொழுது கனகம்மாளும் ஒருவர். முதல் நாள் மாலையிலும், தான் கலந்துகொள்ள இயலாத பகவான் திருச்சபையிலும், பகவான் அருளிய அருள் மொழிகளை மற்ற அடியார்களிடம் கேட்டு அறிந்துகொள்வதை தன் அன்றாட முதன்மை செயல்பாடாகக் கொண்டிருந்தார் கனகம்மாள். அந்தி மாலையிலும், இரவு நேரங்களிலும் திருச்சபையில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆகையால், அப்பொழுது பகவான் அருளியவற்றைப் பணிவிடை செய்பவர்களிடமிருந்து கேட்டறிந்து கொள்வார்.*

*பகவான் இப்பொழுது புதிய மண்டபத்தில் வசித்து வந்தார்; கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன; பணிவிடை செய்பவர்களைத் தவிர வேறு யாரும் புதிய மண்டபத்தில் இரவில் பகவானோடு தங்க முடியாது; முக்கியமாக, குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. மேலும், பணியாளர்கள் இரவில் வெகு நேரம் விழித்திருக்க செய்யக் கூடாது; குறிப்பிட்ட நேரத்தில் உறங்க சென்றுவிட வேண்டும்.*

*கோட்டூர் வெங்கட்ராமன், சப்ரிஜிஸ்ட்ரார் நாராயண அய்யர் மற்றும் டி.பி. ராமச்சந்திர அய்யர்*

ஆகியோர் பகவானுக்கு இரவில் பணிவிடை விரும்பி செய்தனர்; அதனால், பகவானோடு இரவில் தங்கும் நல்வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைத்தது. இந்நாட்களில், பகல் இரவென்று பாராமல் பகவான் தன்னுடன் இருப்பவர்களோடு உரையாடும் பழக்கத்தை கொண்டிருந்தார். ஒரு கதையைக் கூறி வரும்பொழுது பகவான் அதை அழகாக உயிரோட்டம் உள்ளதாக நாடகமாய் நடித்துக் காட்டுவார். இரவில் பணியாளர்கள் பகவானை உரையாடல்களில் ஈடுபடுத்தாமல் அமைதியாய் படுத்திருக்க வேண்டுமென ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமி கட்டளை இட்டிருந்தார். எனவே, குறிப்பிட்ட இடைவெளியில், அவர் மேற்பார்வையிட சுற்றி வரும்பொழுது ஜன்னல் வழியாக நோட்டமிடுவது வழக்கம். கதையினை சொல்லி வரும்பொழுதே பகவான் அதனை நடித்துக் காட்டுவார். அதனை வெங்கட்ராமன் மற்றும் நாராயண அய்யர் ஆகியோர் அமர்ந்து மெய்மறந்து கவனிப்பர். தங்கள் சூழலை முற்றிலும் மறந்துவிடுவர். மேற்பார்வை செய்துகொண்டு சுற்றி வரும் நிரஞ்சனானந்த ஸ்வாமியின் வருகையை உணர்ந்துகொள்ளும் பகவான், கதை கூறுவதை நிறுத்திவிடுவார்; பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு படுத்து விடும்படி சைகையும் செய்வார்; அவர்களும் அவ்வாறே செய்வர். சர்வாதிகாரி பார்வையிட்டு சென்ற சிறிது நேரத்தில் ஆர்வமுள்ள பார்வையாளர்களுக்கு ‘சென்றுவிட்டார்’ என்பதைக் கூற, அமைதியாய் சைகை செய்வார்; அவர்களும் ஆர்வமுடன் எழுந்தமர்வர். எவ்வளவு மழலை மனம் கொண்டவர் பகவான் என்பது இதனால் விளங்குகின்றதன்றோ? (Noble Ramana’, The Mountain Path, Oct.1985, pp.265266).

அது போன்று பகவான் கதை சொல்லிவரும் ஒரு நாள் இரவு நடந்த நிகழ்வினைப் பற்றி அவர்கள் கூற கனகம்மாள் கேட்டறிந்தார். பகவான் கதை

சொல்லிக்கொண்டு வரும்பொழுது, கால் மறத்துப் போகாமல் இருக்க (கால் வாதம்) பகவானின் கால்களை அமுக்கி விட்டுக் கொண்டிருந்தார் வெங்கட்ராமன்; கதையைக் கேட்டு வெங்கட்ராமன் கதையில் ஒன்றிப் போனார். கதை சொல்வதை நிறுத்திவிட்டு பகவான் அவரை உற்று நோக்கினார். மிகவும் அழுத்தத்தோடு பிடித்துவிட வேண்டுமென பகவான் நினைக்கின்றார் என்று கருதி, வெங்கட்ராமன் மேலும் சிறிது கூடிய அழுத்தத்துடன் பிடித்து விட்டார். சிறிது நேரம் கழித்து பகவான் வெங்கட்ராமனைப் பார்த்தார்; அவரும் இன்னும் அதிக அழுத்தத்துடன் பகவானின் காலை பிடித்துவிட்டார். இது போன்று மூன்றாவது முறையும் நடந்தது. திடீரென்று பகவான் கூறினார்.

“என்ன செய்து கொண்டிருக்கின்றீர்? ஏதோ ஒன்றை பிடித்து விட வேண்டுமென விரும்புகின்றீர், இல்லையா? சென்று அந்த கல்தூணைப் பிடித்துவிடுங்கள்.” வெங்கட்ராமன் திகைத்துப் போனார், அதன் பிறகு தான், தன் தவறை உணர்ந்தார். பகவான் கதை கூறியதில் லயித்துப்போன வெங்கட்ராமன் பகவான் கால் முழுதையும் பிடித்து விடுவதற்குப் பதிலாக மீண்டும் மீண்டும் ஒரே இடத்தில் மிகுந்த அழுத்தத்துடன் பிடித்து விட்டுக் கொண்டிருந்தார். அவருடைய தவறை உணர்ந்த பகவான் அவரை உற்று நோக்கியபொழுது, அவர் மேன்மேலும் அதிக அழுத்தத்துடன் பிடித்துவிட்டார்; அந்த அழுத்தம், பிடித்துவிட்ட இடம் வீங்கிப் போகும் அளவு இருந்துள்ளது. மறுநாள் காலையில், பகவானை நேராக சந்திக்க முடியவில்லை; தன் செய்கைக்கு வெட்கப்பட்டு, பகவானின் முன்னால் வருவதை தவிர்த்தார். அவரை உள்ளே அழைத்து பகவான் இவ்வாறு கூறினார், “நீ ஏன் என்னை தவிர்க்கின்றாய்? உன் இடத்தில் யார் இருந்திருந்தாலும் இதைத்

*தான் செய்திருப்பார்கள். நீ கதையில் முற்றிலும் மூழ்கிவிட்டாய். பரவாயில்லை, அது சரிதான்."*

பகவானின் இதமான சொற்கள் வெங்கட்ராமனை இக்கட்டான நிலையிலிருந்து விடுவித்தது. இதற்கு, நாம் பகவானின் மன்னிக்கும் மாண்பினை மட்டுமின்றி தொண்டர்களை மன உளைச்சலிலிருந்து மீட்டெடுக்கும் தாயுள்ளத்தையும் காணலாம்.

ஆறாவது கோஷா

இதுபோன்ற நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்ந்தேறின. தொண்டர்கள் தங்கள் முழுக் கவனத்தையும் பகவான் மீது மட்டுமே செலுத்தினர்; அதுவும் தங்கள் உளமார்ந்த நல் நோக்கத்துடன். ஆனால் சில சமயம், அதுவும் பகவானுக்கு பணிவிடை செய்வதில், அவர்கள் தங்கள் எல்லை கடந்து சென்று செயல்பட்டு விடுகின்றனர்.

அசாதாரணமான குளிர்காலத்தில் ஒருநாள், மனவாசி ராமஸ்வாமி அய்யர், கௌபீனமும் (காட்டன்) பருத்தியினால் ஆன வேட்டியும் பகவானை இக்கடுங்குளிரிலிருந்து பாதுகாக்க போதுமானதல்ல என உணர்ந்தார்; அதனால், அவர் பகவானுக்காக இரண்டு சட்டைகளை தைத்துக் கொண்டு வந்தார். அவற்றை பகவானுக்கு நேரடியாக கொடுப்பதற்கு தைரியமில்லாததால் பகவான் மலை மீது ஏறிச் சென்றிருந்த தருணத்தில் பகவான் முன்னால் இருக்கும் ஸ்டூலில் வைத்துவிட்டார். திரும்பி வந்தவுடன் சட்டைகளைப் பார்த்துவிட்டு பகவான், உதவியாளரிடம் இதைப் பற்றி வினவினார். அதே நேரத்தில் மனவாசி உள்ளே நுழைந்து அதிகம் கேட்காதவாறு முனுமுனுப்பாகக் கூறினார், "அவற்றை நான்தான் அங்கு வைத்தேன். இங்கு கடுங்குளிராய் இருக்கின்றது; மேலும், ..." என்று தொடரும்முன் பகவான் இடைமறித்துக் கூறினார், "நான், குளிராய் இருக்கிறதென்று புகார் கூறினேனா?"

*"இல்லை பகவான், நான் தான் முயற்சி எடுத்தேன்; பகவான் குளிரிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தேன் ஆனால், அவற்றை பகவான் செவிமடுத்து கேட்கவில்லை. இல்லை, அவற்றை எடுத்துச் செல்லுங்கள்." மனவாசி தொடர்ந்து வலியுறுத்தினார். ஆனால், அவை எவற்றாலும் பகவானை அவற்றை ஏற்றக்கொள்ள வைக்க முடியவில்லை. இறுதியாக, சிறிது ஏமாற்றத்துடன் பகவான் கூறினார், "இப்பொழுதே நான் ஐந்து சட்டைகளை அணிந்துள்ளேன். (ஐந்து கோஷாக்களை குறிப்பிடுகின்றார்). ஆறாவதாக ஒன்று அவசியமா?" ('Remembering Bhagavan' The Mountain Path, Jayanti 2007, pp.4445)*

*மற்றொரு தருணத்தில், ஒரு தொண்டர் வேறு வகையான வேண்டுதலை முன்வைத்தார். பகவான் ஆஸ்ரமத்திலும், அதை சுற்றியுள்ள இடங்களிலும் நடை பயிற்சியில் ஈடுபடுவதை படத்துறை சாராத சிலர் படம் எடுப்பதைக் கண்டு, பகவானின் குரலை இன்னும் யாரும் ஒலி நாடாவில் பதிவேற்றவில்லையே என்று குறிப்பிட்டார். அந்த நாள் குறித்து கனகம்மாள் இவ்வாறு விவரிக்கிறார்.*

*குரலை பதிவு செய்யும் ஒலிநாடா பெட்டியை பகவானின் மண்டபத்திற்கு கொண்டு வரும் வரை, குரலை பதிவு செய்ய பகவான் அவரை அனுமதிப்பாரா என்ற பயம் அவரிடமிருந்தது. பகவானின் முன்னால் ஆயத்த நிலையில் வைத்தார்; பகவானை நமஸ்கரித்து அவரது குரலை பதிவு செய்ய அனுமதி வேண்டினார்; அந்த பக்தர் ஆச்சரியபடும்படி ஒலியை பதிவு செய்யும் முறை பற்றிய தொழில்நுட்ப கேள்விகளை பகவான் எழுப்பினார். பகவானின் கேள்விகளுக்கு பதில் அளித்தார். பகவானின் தொழில்நுட்பம் மற்றும் குரலை பதிவு செய்ய இணக்கம் உள்ளது என்ற*

*எண்ணமும் அத்தொண்டரை பதட்டத்திலிருந்து விடுவித்தது. தொழில்நுட்பம் பற்றி விளக்கம் அளித்தவுடன் மண்டபத்தில் குழுமி இருந்த பக்தர்களிடம் சென்று குரலை பதிவு செய்யும்பொழுது அமைதியாய் இருக்குமாறு கேட்டுக்கொண்டார். அங்கு நடப்பனவற்றை முழுக்கவனத்துடன் பகவான் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த பக்தர் ஒலியைப் பெறும் மைக்ரோ போனை பகவான் அருகில் வைத்தவுடன் குரலை பதிவு செய்ய ஸ்விட்ச்சை அழுத்தி செயல்படச் செய்தார் (Switched on). அவர் சிறிது நகர்ந்து அப்பால் சென்றார்; அமைதி நிலவியது. பதிவு செய்யும் ஒலி நாடா சுற்றும் சப்தம் மட்டுமே கேட்டது. முழு அமைதியுடன் பத்து அல்லது பதினைந்து நிமிடம் கடந்தது; என்ன செய்வதென்று புரியாமல் அந்த பக்தர் பகவான் அருகில் சென்று ஒலிப்பதிவு பெட்டி ஸ்விட்ச்சை அணைத்துவிட்டார்; பின்பு, மிகுந்த பணிவுடன் மெல்லிய குரலில் பகவானிடம் ஏன் அவர் பேசவில்லை என்று கேட்டார்; அவர் பேசவில்லை என்றால் அவரது குரலை பதிவு செய்ய இயலாது என்று கூறினார். பகவான் பதிலுரைத்தார், ஏன் அவ்வாறு நினைக்கின்றீர்? என் குரல், உண்மையில், பதிவு செய்யப்பட்டுவிட்டது. என்னுடைய மொழி மௌனமே; அது பதிவு செய்யப்பட்டுவிட்டது. அவ்வாறு இல்லையா? இதைக் கேட்டவுடன் அந்த பக்தர் திகைத்து நின்றார். அப்பொழுது ஸ்ரீ முருகனார் அந்த பக்தரிடம் கேட்டார்; இந்த கேள்விகளை பகவானிடம் கேட்கும் முன் ஏன் ஒலிப்பதிவு ஸ்விட்ச்சை அழுத்தி அணைத்துவிட்டீர்? அப்படி செய்யாமல் இருந்திருந்தால் குறைந்தது பகவானது விளக்கமாவது அவரது குரலில் பதிவாகி இருக்குமே! இப்பொழுது அந்த பக்தர் மேலும் குழப்பமடைந்து திகைப்புற்றார். (நியூயார்க்கின் அருணாசல*

*ஆஸ்ரமத்தில் மே 12, 1991ல் கனகம்மாள் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து).*

*கடவுளின் தரிசனம்*

*பக்தர்கள் கேட்ட விளக்கங்களும் வேண்டுகோள்களும் பல்வேறு துறைகளைச் சார்ந்தவை; பகவான் அவற்றிற்கு ஒவ்வொன்றாய் பதில்தர எப்பொழுதும் ஆயத்தமாய் இருந்தார். ஆனால், சில சமயம், அடியார்களில் யாரேனும் ஒருவர் முன்வந்து பதிலளிப்பார். ஒரு நாள் பார்வையாளர் ஒருவர் தரிசன மண்டபத்திற்கு வந்தார். இளம் வயது முதல் அவர் அருள்மிகு சுப்பிரமணிய தெய்வத்தை ஆராதனை செய்பவர் பின்பற்ற வேண்டிய, வேதத்தில் சொல்லப்பட்டுள்ள நெறிமுறைகளை பிறழாமல் செய்து வந்துள்ளார். அவர் தரிசன மண்டபத்தினுள் வந்து பகவானிடம் சோகம் நிரம்ப கூறினார், ஸ்வாமி! எனது சிறு வயது முதல் நான் முருகக் கடவுளை பக்தியோடு தொழுது வருகின்றேன்; ஆனால், இதுவரையில் எனக்கு முருகக் கடவுள் காட்சி தந்தருளவில்லை. பகவான் அமைதியில் ஆழ்ந்து அமர்ந்து, வந்திருந்த பக்தர் மீது தன் அருள் பார்வையை வீசி, அவரையே ஆழ்ந்து நோக்கிக் கொண்டே இருந்தார். இதுகாறும், கவிஞரான முருகனார் அருகிலேயே அமர்ந்திருந்தார். பொதுவாக, முருகனார் எப்பொழுதும் பேசியதில்லை; எவருடைய அறிமுகத்தையும் ஏற்றுக் கொண்டதுமில்லை. அதுவும் குறிப்பாக சில நாட்களே வருபவர்களை ஏற்றுக் கொண்டதில்லை. யாரேனும் அவருக்கு அறைகூவல்விட்டாலும், தூண்டிவிட்டாலும் எவ்வகையால் கோபப்படுத்தினாலும் அவர் அமைதியாகவே இருந்துவிடுவார். ஆனால், இந்த நாள் வேறுவிதமாய் அமைந்தது. வந்திருக்கும் பக்தரின் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த வேண்டுதல் விண்ணப்பத்தை செவிமடுத்த முருகனார், அவரை இடைமறித்து, தன் கைகளை உயர்த்தி பகவானை*

*நோக்கி உறுதியாக கையசைத்து சொன்னார், சுப்பிரமணிய கடவுள் தரிசனத்திற்காக இதுநாள் வரை நீங்கள் காத்திருக்கின்றீர்! எனதருமை மாமனிதரே! நீங்கள் எந்த நாளுக்காகக் காத்திருந்தீரோ அந்த நாளும் இன்று வந்துவிட்டது! பிறகு கிஞ்சித்தும் தயக்கமில்லாமல், தங்கள் முன்னால் சோபாவில் சாய்ந்து பேரரசராய் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பகவானை நோக்கி கையசைத்து வழிகாட்டி, வாய்திறந்து உள்ளத்தை ஊடுருவிச் செல்லும் சொற்களை அருளி ஆற்றுப்படுத்தினார், உன் முன்னால் இங்கு எழுந்தருளி வீற்றிருக்கும் இவர் வேறு யாரென்று நினைத்தாய்? உன் முன்னால் வீற்றிருக்கும் அவனை அம் முருகப் பெருமானை உன்னால் காண முடியவில்லையா?*

*வாழ்நாள் தவத்திற்கு பலன் கிடைத்தாற் போன்று பக்தரின் கண் முன்னால் பகவானின் சொரூபம் உண்மையில் சுப்பிரமணியக் கடவுளின் சொரூபமாய் பேரொளி வீசி பகவான் காட்சி தந்தருளினார். சுப்பிரமணியக் கடவுளின் தரிசனத்தால் வைத்த கண் வாங்காமல் பேச்சற்று வேர்விட்டு வளர்ந்தார்ப்போல் அசையாது நின்ற இடத்திலிலேயே நின்றுவிட்டார் அந்த பக்தர். பிறகு, தன் கண்களால் காண்பவை எல்லாம் உண்மையா அல்லது கண்களின் பார்வை பிறழ்ச்சியா என அறிய முற்படுவதுபோல் தன் கண்களை தேய்த்துக் கொண்டு உற்று உற்றுப் பார்த்தார். இறுதியில், சுப்பிரமணியக் கடவுளின் திருக்கோல காட்சியால், வைத்த கண் வாங்காமல், திறந்தவாய் மூடாமல் பேராச்சரியம் முகத்தில் நிற்க கண்களில் திரண்ட நீர் கண்ணங்களில் கரைந்தோட காணக்கிடைக்காத காட்சிதனை கண்ணாறக் கண்டு நின்றார். நெகிழ்ந்த நெஞ்சத்தோடு வாய்குளறி வார்த்தைகள் வந்து விழுந்தன. ஆமாம், ஆமாம். (‘Encounters with Bhagavan; part 1, The Mountain Path, April 2006, pp. 4243.*



இந்த நிகழ்வு நிகழ்ந்த நாளன்று மாலையில், அந்த குறிப்பிட்ட பக்தர், தனக்கு கிடைத்த கிடைத்தற்கறிய தெய்வீக திருக்கோலக் காட்சி நிகழ ஶ்ரீ முருகனார் ஆற்றிய உதவிக்கு, ஶ்ரீ முருகனாரை சாஸ்டாங்கமாக நமஸ்கரித்து உளமாற நன்றியையும் தன் வணக்கத்தையும் செலுத்தினார் என்ற விளக்கத்தில் இவை கிடைக்கின்றன.

## முதலும் வட்டியும்

மற்றொரு நாள் மற்றுமொரு நிகழ்வு, தென்னிந்தியாவில் புகழ்பெற்று திகழ்ந்த ஒரு ஸ்வாமியின் சீடர் ஒருவர் பகவானை தரிசிக்க வந்தார். அவர் மிகுந்த தயக்கத்துடன் பகவானிடம் அவரது குருவைப் பற்றி கூறினார். அவருடைய குரு, அவருடைய சீடர்கள் ஒவ்வொரு நாளும் பல்லாயிரக் கணக்கான ஜபம் செய்ய வேண்டும்; அதன் பலன் முழுவதையும் குருவிற்கு காணிக்கையாக அர்ப்பணித்திட வேண்டுமென அறிவுறுத்துவதாகக் கூறினார், பகவான் புன்முறுவல் பூக்கக் கூறினார்;

அப்படியா? அது பாராட்டப்பட வேண்டியது தான். எவ்வித முயற்சியுமின்றி குருவிற்கு நல்ல லாபம் தான்!

பகவான் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே முருகனார் பழைய தியான மண்டபத்தினுள் நுழைந்தார். முருகனாரைப் பார்த்து பகவான் கூறினார், உங்களுக்குத் தெரியுமா? இவருடைய குரு அவரது சீடர்களை அனுதினமும் பல்லாயிரக் கணக்கான நாம ஜபங்களை செய்யுமாறும் அதன் பலனை முற்றிலுமாக குருவிற்கு காணிக்கையாக அர்ப்பணித்திட வேண்டுமென அறிவுறுத்துகின்றாராம். அதன்பிறகு சீடர்களின் கணக்கில் ஏதேனும் வருமானம் எஞ்சி இருக்குமா? இது அசல் தொகையை விட்டுவைத்துவிட்டு வட்டி முழுவதையும் குருவிற்கு காணிக்கையாய் அர்ப்பணிப்பது போலல்லவா? உள்ளது. இதை நீங்கள் எவ்வாறு எடுத்துக் கொள்கின்றீர்?

கண்ணீர் நிறைந்த கண்களுடன் முருகனார் பதிலுரைத்தார், பகவான், அவருடைய குருவானவர் மிகச் சிறந்தவராய் இருக்கின்றார். அவராவது அசலை சீடரிடையே விட்டுவிட்டு வட்டியை மட்டும் கொடுக்குமாறு கேட்கின்றார். ஆனால், இந்த குருவானவரோ (பகவானை சுட்டிக் காண்பித்து) இன்னும் மோசம். இவர் பக்தர்களிடமிருந்து அசலையும் (முதல்) வட்டியையும் சேர்த்து முற்றிலுமாய் கேட்கின்றார்.

கவிஞரின் கேளிக்கையை ரசித்து தெய்வீக குமிண் சிரிப்பை படரவிட்டார் பகவான்.

**மௌன தீக்ஷை**

பகவானோடு அவருடைய அணுக்கத் தொண்டர்களில் ஒருவராய் இருந்த மூன்றாண்டுகளில் கனகம்மாள் தொடர்ந்து மௌனமாகவே இருந்தார்;

*பழைய தியான மண்டபத்தில் பின் வரிசையில் அமர்ந்திருந்தார். எவ்வாறாயினும் 1949ஆம் ஆண்டு ஒரு நாள் காலையில் அமர்கின்ற வரிசை மாற்றி அமைக்கப்பட்டது.*

*ஒரு நாள், ராணி மஜும்தார் சொன்னார்; முன்வரிசையில் யாருமே இல்லை; இன்று நாம் சென்று அங்கு அமர்வோம் உண்மையில் இது ஒரு மனம் கவரும் கருத்தாகும்! எங்களில் இருவர் பகவானின் மிக அருகில் உள்ள இடத்தை நோக்கிச் செல்வதை கவனித்த காமேஸ்வரம்மாவும் எங்களோடு வந்தமர்ந்தார். பகவானை சாஸ்டாங்கமாக நமஸ்கரித்து விட்டு நானும் அமர்ந்தேன். அந்நொடியில் பகவானின் பார்வை என் மீது நிலைகொண்டது. பகவானை கண்ணாறக்காண வேண்டுமென்றால் பகவானின் பார்வை உங்கள் மீது நேரடியாய் விழாத நேரத்தை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும். அவருடைய தீட்சண்யமான பார்வை உங்கள் மீது முழுதும் விழும்பொழுது, உங்கள் கண்களை திறந்து வைக்க முடியாத அளவுக்கு ஏதோ ஒன்று உங்களிடம் நிகழ்கின்றது. பகவானின் தீட்சண்யமான முழுப் பார்வையின் தாக்கம் சாதாரணமான மனிதர்களால் தாங்க இயலா அளவிற்கு இருக்கின்றது. காண இயலாத ஏதோவொரு சக்தி உங்களின் உள் நுழைந்து உங்களின் மூலாதாரமான உந்திக் கமலம் வரை ஊடுருவிச் சென்று, நீங்கள் வேறெதுமாய் இல்லாமல் நீங்கள் உங்களை உணர்ந்து தானே தானாய் நின்று சத்சித் ஆனந்த பேரெழுச்சியாய் திளைக்கச் செய்கின்றது.*

*சிறிது நேரம் நான் பகவானை உற்று நோக்கினேன். எவ்வாறாயினும், சில நொடிகளில் என் கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன. எடுத்தியம்ப இயலா. ஆழ்ந்த அமைதியில் அமிழ்ந்து போனேன். அந்நிலையில் நான் எவ்வளவு நேரம் ஆழ்ந்திருந்தேன்*

*என்பதை நானறியேன். சிறிது நேரம் கடந்து கண்களைத் திறந்தேன்; பகவானின் பார்வை இன்னும் என் மீதே நிலைத்திருப்பதைக் கண்டேன். அவருடைய நிலையிலிருந்து அவர் மாறவில்லை; என் மீது படரவிடப்பட்ட ஆட்கொண்டு ஆற்றுப்படுத்தும் ஆழ்ந்த பார்வையையும் அகற்றவில்லை. மீண்டும் கண்களை மூடிக்கொண்டேன் நான்.*

*சிறிது நேரம் சென்றபின், சில குரல் ஒலிகளைக் கேட்டு கண்களை திறந்து என்ன நிகழ்கிறதென்று நான் பார்த்தேன். மௌனி ஸ்ரீநிவாஸ ராவ் அன்றைய தபால்களை கொண்டு வந்திருந்தார். பகவான் தபால்களை வாசித்தார்; மற்ற அலுவலகத் தொடர்புகளையும் வாசித்தறிந்தார். மண்டபத்தை விட்டு மௌனி சென்றபின் பகவான் எழுந்து தன்னுடைய உதவியாளருடன் கோசாலையை நோக்கி நடந்தார். இந்நிலையில், நானும் எழுந்து பின்னால் ஜன்னலுக்கு கீழ் நான் வழக்கமாய் அமர்கின்ற இடத்திற்கு சென்றேன். காமேஸ்வரம்மா என்னை பின் தொடர்ந்தார். அவர் மிகவும் உணர்ச்சி வயப்பட்டு இருந்தார். அவர் என்னை கட்டி அணைத்து, கண்களில் நீர் தழும்ப கூறினார், கனகம்மா, நீ உண்மையில் மிக அதிர்ஷ்டசாலி; என்ன அற்புதமான தெய்வீக அனுபவம் நீ அனுபவமாகியுள்ளாய்! அவர் முன்னால் நீ அமர்ந்த நொடியிலிருந்து மௌனி வந்து சேரும் வரையில் பகவானின் பார்வை வீச்சு உன் மீதே நிலைகொண்டிருந்தது. ஒரு நொடி கூட பார்வையை அவர் அகற்றவில்லை. பகவானையும் உன்னையும் எப்பொழுதும் நான் கவனித்துக்கொண்டே தான் இருந்தேன். பகவானின் கண்ணோக்கம் உன் மீது நிகழ்த்திய தாக்கத்தை என்னால் பார்க்க முடிந்தது. இன்று பகவான் உன் மீது கருணை மழை பொழிந்தார்; அவரது இடையறா கண்ணோக்கால் உன் மீது கருணை மழை பொழிந்து கொண்டே இருந்தார். இதைவிட உனக்கு வேறென்ன வேண்டும்!*

*நான் எதுவும் சொல்லக் கூடிய நிலையில் இல்லை; அவர் சொல்லிய சொற்களுக்கு என்னால் பதில் கூற இயலவில்லை. என் மன நிலையை சொற்களால் சொல்ல இயலாது; என்னுள் ஆழ்ந்த அளவிலா அமைதியை உணர்ந்தேன். என் கண்களிலிருந்து கன்னத்தின் வழியே தாரை தாரையாய் தொடர்ந்து உருண்டோடும் திவலைகளே என் மனநிலையின் வெளிப்பாடாய் நிலைத்தது. இதன் பிறகு நீண்ட நாட்கள் இந்த உள்ளாழ்ந்த அமைதி என்னுள் நிலைத்திருந்தது. பெரும்பாலான ஆன்மிக குருமார்கள், ஆன்மிகத்தில் ஆற்றுப்படுத்தும் சம்பிரதாயமான தீக்ஷை பெறுதலை இன்றியமையாததாகக் கருதுகின்றனர். ஆனால், பகவானின் வழி அது அல்ல. அவர் எப்பொழுதும் யாருக்கும் தீக்ஷை அளித்ததில்லை. இருந்த போதிலும், அவருடைய தீட்சண்யமான பார்வையாலேயே திட்டமிடப்படாத தெய்வீக நிகழ்வுகளை நிகழ்த்தினார். அவருடைய அநேக அணுக்கத் தொண்டர்கள் எனக்கு அருளப்பட்ட இறை அனுபவம் போன்ற, தன்னை அறிந்து தானாய் இருத்தலாகிய பேரானந்த உன்னத ஆனந்தத்தில் பகவானின் கண் பார்வையால் திளைத்துள்ளனர். அவர்கள் எல்லோரும் பகவானின் கருணைக் கண் தெய்வீக ஆற்றல் மிகு பார்வைக்கு ஆட்பட்டு ஆற்றுப்படுத்தப்பட்டவராய் உள்ளனர். கருணை மிகு பார்வையாலேயே பகவான் ஒவ்வொருவரின் மனதையும் உள்ளத்தையும் ஒட்டுமொத்தமாய் உன்னத மாற்றம் செய்தார்; செய்கின்றார். அருவியாய்ப் பாயும் அருட்கடலான பகவானின் கண்ணோக்கத்தால் மட்டுமே ஒருவர் தன் எல்லா இடையூறுகளையும் கடந்து, தன் சுயமுயற்சி ஏதுமின்றி சத்சித் ஆனந்த பேரானந்தத்தில் நிலைத்திருக்க முடியும். (Cherished Memories, pp.6365)*

*(நன்றி சரணாகதி)*

(தொடரும்)



# ஸ்ரீ ரமணாஸ்ரமம் – மஹா கும்பாபிஷேகம் – 2025

உலகெங்கிலும் உள்ள அனைத்து ஜீவராசிகளும் ஜாதி, மத, இன பேதங்களைக் கடந்து, நிரந்தர அனுக்ரஹ விலாசமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் ஸ்ரீ மாத்ருபூதேஸ்வர மற்றும் ஸ்ரீ ரமணேஸ்வர சந்நிதானங்களின் கும்பாபிஷேகம், கடந்த ஆகஸ்ட் 20, 2025, பகவான் அவதரித்த புனர்வசு நட்சத்திர நாளன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

### மாத்ருபூதேஸ்வர ஆலயத் தோற்றம்

ஞானத்திரளான ரமணர், தன்னை ஈன்றெடுத்த அழகம்மைக்குத் தனது திருக்கரத்தால் வாசனைகள் அழிந்து, ஆத்மாவுடன் ஐக்கியப்படுத்தி, 1922 ஆம் ஆண்டு முக்தியடையச் செய்தார். இதன் விளைவாக, அவரது உடல் புனிதமானதாகக் கருதப்பட்டு, பாலி தீர்த்தத்திற்கு கிழக்கே நல்லடக்கம் செய்யப்பட்டது. பத்து நாட்களுக்குப் பிறகு, பக்தர்கள் அவரது சமாதியில் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தனர், அது பகவானால் நேரடியாகத் தொடப்பட்டது. அருகில் அழகம்மாள் தீர்த்தம் என்று அழைக்கப்படும் ஒரு கிணறு தோண்டப்பட்டது. இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு, பகவான் மலையிலிருந்து இறங்கி, தற்போது ஆசிரமம் அமைந்துள்ள இடத்திற்கு வந்து தங்கினார்.

சின்னசுவாமியின் முயற்சிகள் மற்றும் பகவானின் ஆசீர்வாதங்களால், பத்தாண்டு கால உழைப்புக்குப் பிறகு, 1948 ஆம் ஆண்டில், மாத்ருபூதேஸ்வரர் கோயில்

நிறைவடைந்தது. சின்னசுவாமி, கும்பாபிஷேகத்திற்கான (கோயில் பிரதிஷ்டை) பொருட்களை கவனமாக ஏற்பாடு செய்தார். எண்ணற்ற சவால்களைத் தாண்டி, வேத விதிமுறைகளின்படி சடங்குகள் நடைபெறுவதை உறுதிசெய்து, இந்த புனிதமான பணியை வெற்றிகரமாக முடிப்பதற்கு அளப்பரிய மனோதிடமும் தைரியமும் தேவைப்பட்டது. இது ஆசிரமத்திற்கு சின்னசுவாமியின் சேவையின் உச்சக்கட்டமாக அமைந்தது.

*1949 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம்*

கும்பாபிஷேகம் 1949 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதி வரை நடைபெற்றது. நான்கு நாட்கள் நூற்றுக்கணக்கான வேத விற்பன்னர்கள் பங்கேற்க, சிரத்தையான வேத கோஷங்கள் மற்றும் ஹோமங்களுடன் மார்ச் 17 ஆம் தேதி கும்பாபிஷேகம் சிறப்பான முறையில் நடந்தேறியது. பூரி மடாதிபதி ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்தர், சங்கராச்சாரியார் சுவாமிகள், இந்த நிகழ்வில் பங்கேற்றார். மிகப் பிரம்மாண்டமாக இருந்த இந்த வைபவத்தில் தினமும் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு உணவளிக்கப்பட்டது. இவை அனைத்தும் பகவானால் நேரடியாக கண்காணிக்கப்பட்டன. ஜனத்திரளைக் கட்டுப்படுத்த காவல்துறையினரும் தீயணைப்பு வீரர்களும் தயார் நிலையில் இருந்தனர்.

பகவான் பூர்ண கலசத்தை புதிய மண்டபத்திற்கும் பின்னர் அன்னை சன்னதிக்கும் எடுத்துச் சென்று, பிரதிஷ்டை செய்தார். பின்னர் அவர் புதிய மண்டபத்தில் தனக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த புதிய கருங்கற்களால் ஆன சோபாவில் அமர்ந்தார்.

சின்னசுவாமியின் குறைபாடற்ற ஏற்பாடுகளுக்காக அவருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. நெல்லூர் சாம்பசிவ ராவ், பகவானின் சம்மதத்துடன், சின்னசுவாமிக்கு பாத பூஜை செய்ய விரும்பியபோது, சின்னசுவாமி பணிவுடன் மறுத்து, “தேகாத்ம பாவம்”

(நான் உடல் என்ற உணர்வு) இல்லாதவர்களுக்கு மட்டுமே அது தகுதியானது என்று கூறினார். இறுதியில் அவர் சம்மதித்து, பகவானின் வெள்ளிப் பாதணிகளுக்கு பூஜை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பகவானின் பிரசாதமாக காவி உடையை ஏற்றுக்கொண்ட பிறகு, சின்னசுவாமி உறுதியான தொனியில், பகவானின் முன்னிலையில் அனைத்து மரியாதைகளும் பூஜைகளும் பகவானுக்கு மட்டுமே செய்யப்பட வேண்டும் என்று அறிவித்தார். பக்தர்களின் அழுத்தத்தால் இந்த விதிவிலக்கு ஒரு முறை மட்டுமே ஏற்பட்டது என்றும், மீண்டும் இது நிகழாது என்றும் அவர் உறுதிபடக் கூறினார்.

பின்னர் சின்னசுவாமி இந்த மகத்தான நிகழ்வு வெற்றிகரமாக நடந்தேற பின்புலத்தில் உழைத்த அனைவரையும் அழைத்து நினைவுப் பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

### 2025 ஆம் ஆண்டு கும்பாபிஷேக வைபவம்

1949 இல் நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வின் சாரம்சத்தைக் கண்டோம். அதைப்போலவே தற்போது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆம் நாட்கள் நடைபெற்ற ஏழாவது கும்பாபிஷேக வைபவத்தின் சுருக்கத்தை இங்கே அளிக்கின்றோம்.

### திருப்பணிகள் மற்றும் முன்னேற்பாடுகள்:

கடந்த மே மாதம் முதல் நடைபெற்று வந்த திருப்பணிகள் முழுவதும் ஆகஸ்ட் முதல் வாரத்தில் நிறைவடைந்தன. ஜூலை முதல் வாரத்தில் அழைப்பிதழ்கள் முக்கிய பிரமுகர்கள், உலகெங்கிலும் உள்ள ரமண அன்பர்கள், உள்ளூர் பொதுமக்கள், அரசு அதிகாரிகள் மற்றும் அனைத்து ரமண கேந்திரங்கள் என அனைவருக்கும் நேரடியாகவும், தபால் மூலமாகவும் மற்றும் பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும் அனுப்பி வைக்கப்பட்டன.

யாகசாலை பந்தல் பசு லக்ஷ்மி சமாதிக்கு எதிரில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டது. ஆசிரம வளாகத்தில் அன்பர்கள் தங்குவதற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காவல்துறை, தீயணைப்புத் துறை தன்னார்வலர்கள் தங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கும்பாபிஷேகத்திற்காக வருகை தந்த வைதீக பிராமணர்கள் மற்றும் சடங்குகளில் பங்கேற்கும் மற்றவர்களுக்காகத் தனி சமையற்கூடங்கள் மற்றும் தங்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டன.

ஆசிரம பாகசாலையில் பிரத்யேகமாக வரவழைக்கப்பட்ட சமையல் கலைஞர்களைக் கொண்டு பிரம்மாண்டமான முறையில் அனைவருக்கும் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

ஆசிரமம் முழுவதும் தோரணங்கள், மாலைகள் மற்றும் கோலங்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. இரவில் ஒளி விளக்குகளால் ஜொலித்தன. சமையலுக்கான அரிசி, காய்கறிகள், அத்தியாவசிய பொருட்கள் மட்டுமல்லாது தர்பை, சமித்துகள், அத்தியாவசிய பூஜை பொருட்கள் ஏராளமாக வந்தடைந்தன.

வாகனங்களுக்கு சிறப்பு நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சாலைகளில் வாகன நெரிசல்களைத் தவிர்த்து போக்குவரத்தைச் சீர்படுத்தவும் போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் பயன்படுத்தப் பட்டனர். ஆசிரம பணியாளர் மற்றும் பக்தர்கள் அனைவருக்கும் பணிகள் ஒதுக்கப்பட்டன.

### பூஜை நிகழ்வுகள்

ஆகஸ்ட் 18, ஆம் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு முதல் யாகசாலை பூஜை தொடங்கியது. காலை 10.30 மணி முதல் 11 மணிக்குள் பூர்ணாஹுதி மற்றும் மகா தீபாராதனையுடன் நிறைவுற்றது. மதியம் 4.30 மணிக்கு

*முதல் கால யாகசாலை பிரவேசம் தொடங்கி இரவு 8 மணிக்கு மகா தீபாராதனையுடன் நடைபெற்றது.*

*செவ்வாய்க்கிழமை, 19 ஆம் தேதி, இரண்டாம் கால யாகசாலை பூஜை மற்றும் மாலை 3 ஆம் கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.*

*பூஜைக்குப் பிறகு, பண்டிதர்கள் நான்கு வேதங்களிலிருந்தும் பகுதிகளை ஓதினர். ஓதுவார்கள் அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரின் தேவாரப் பாடல்களைப் பாடினர். நாதஸ்வர வித்வான்கள் மற்றும் தவில் வித்வான்கள் தங்கள் வாத்தியங்களில் சில குறிப்பிட்ட ராகங்கள் மற்றும் தாளங்களை வாசித்தனர்.*

*புதன்கிழமை, 20 ஆம் தேதி, காலை 6.30 மணிக்கு 4 ஆம் கால யாகசாலை பூஜை தொடங்கி காலை 9 மணிக்கு மகா தீபாராதனையுடன் முடிந்தது.*

*இந்த மூன்று நாட்கள் நடைபெற்ற யாகசாலை பூஜைகளில் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மதுபர்க்கம், வாஸ்து ஹோமம், மந்திர புஷ்பம், ருத்ர திரிசதி, கன்யா மற்றும் சுவாசினி பூஜைகள், திரிமூர்த்தி அஷ்டபந்தனம், பிம்ப சுத்தி, கௌதுக பந்தனம், ரமண மற்றும் லலிதா சஹஸ்ரநாம அர்ச்சனைகள் போன்றவற்றை சுமார் நூற்றுக்கணக்கான வேத விற்பன்னர்கள், பாடசாலை மாணவர்கள் பங்கேற்று நடத்தினர்.*

*பின்னர் யாத்ரா தானம் தொடங்கியது. கலசங்களை பகவான் மற்றும் அன்னையின் சன்னதிகளின் அந்தந்த விமானங்களின் உச்சியில் உள்ள உலோக கலசங்களுக்கு காலை 9.45 மணி முதல் 10.15 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இறுதியாக, காலை 11.00 மணிக்கு இரு சன்னதிகளுக்கும் மகா அபிஷேகம்*



மற்றும் மகா தீபாராதனையுடன் கும்பாபிஷேக நிகழ்வுகள் நிறைவுற்றன.

### பக்தர்களுக்கான வசதிகள் மற்றும் முன்னேற்பாடுகள்

பொதுமக்கள் பக்தர்கள் ஆச்ரமம் வந்து யாகசாலை பூஜைகளை தடையின்றி கண்டு செல்லவும் அமர்ந்து தரிசிக்கவும் தன்னார்வலர்கள் மற்றும் பாதுகாப்பு காவலர்களைக் கொண்டு முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மூன்று நாட்களும் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் (தினசரி நடைபெறும் நாராயண சேவை மற்றும் ஆச்ரம பக்தர்கள் பணியாளர்களுக்கு அளிக்கும் உணவு அல்லாது கூடுதலாக சுமார் 10,000 நபர்களுக்கு) காலை, மதியம் மற்றும் இரவு உணவு விருந்து வழங்கப்பட்டது. நெரிசலைத் தவிர்த்து சௌகரியமாக உணவைப் பெறுவதற்கு இரண்டு மூன்று இடங்களில் உணவளிக்கவும் பக்தர்கள் அமர்ந்து சாப்பிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டன. ஆண் பெண் இருபாலர்க்கும் கூடுதலாக கழிப்பறைகள் இதற்கென கட்டப்பட்டன.

ஓதுவார்கள் பக்திப் பாடல்கள் மற்றும் தேவாரம் பாடல்களைப் பாடி பார்வையாளர்களைக் கவர்ந்தனர், அதே நேரத்தில் நாதஸ்வர வித்வான்களும் தமிழ் வித்வான்களும் ராகங்கள் மற்றும் தாளங்களை வாசித்துக் காட்டினர். கர்நாடக இசை நிகழ்ச்சிகளும் பக்தர்களை மகிழ்வித்தன. ஆசிரமம் முழுவதும் பக்தி இசையாலும் மந்திரங்களாலும் எதிரொலித்தது.

மூன்று நாட்கள் நடைபெற்ற நிகழ்வுகள் ஆச்ரம YouTube சேனல் வாயிலாக உலகெங்கிலும் உள்ள அன்பர்கள் கண்டு களிக்க நேரலை செய்யப்பட்டது. ஆச்ரம வளாகங்களில் முக்கிய இடங்களில் பக்தர்கள் அமர்ந்து காண்பதற்கு பெரிய திரைகளிலும் இந்த நேரலை ஒளிபரப்பப்பட்டது. கும்பாபிஷேக புனித நீர் கலந்து கொண்ட அனைவருக்கும் தெளிக்கப்பட்டது.

பக்தி வெள்ளத்தில் திளைத்த அடியார்கள் செவிகுளிர இனிய மந்திர முழக்கங்களையும், தெய்வீக இசையையும் அள்ளிப் பருகினர். யாகசாலைப் பூஜைகளின் கம்பீரத்தையும், கும்பாபிஷேகத்தின் கோலாகலத்தையும் கண்குளிரக் கண்டு, உள்ளம் உருகினர். நாவிற்கினிய பல்சுவைப் பிரசாதங்களை உண்டு மகிழ்ந்து, அன்பர்களின் உள்ளங்கள் பக்திப் பரவசத்தாலும், பேரானந்தத்தாலும் பூரித்தன.

1949 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் விண்ணதிர்வுகள் பகவானின் ஜீவ சாந்நித்தியத்துடன் எதிரொலித்தது போலவே, 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக விழாவும் அவரது நித்திய தெய்வீக சாராம்சத்தாலும், அளவற்ற கருணையாலும் மெய்மறக்கச் செய்யும் மகத்துவத்துடன் நடந்தேறியது.



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### அருணை விஜய விழா

*சுமார் 129 ஆண்டுகளுக்கு முன்னர், இளந்துறவியாகிய பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் அருணாசலத் திருத்தலத்தை (திருவண்ணாமலையை) வந்தடைந்த செப்டம்பர் முதல் நாள் ஒவ்வோராண்டும் அருணை விஜய தினமாக ரமண அன்பர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.*

*இவ்வாண்டும், மதுரை உட்படப் பல்வேறு புண்ணியத் தலங்களில் இருந்து திரளான அன்பர்கள் ஆஸ்ரமத்தை வந்தடைந்து, இந்த விஜயத் திருநாளை, அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் சிறப்புப் பூஜைகளுடன் உளமுருகிக் கொண்டாடி மகிழ்ந்தனர்.*

### நவராத்திரி வைபவம்

*யோகாம்பிகை அன்னையை கொலு மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யும் மங்கல நிகழ்வுடன் நவராத்திரி வைபவம் 21.09.2025 அன்று இனிதே துவங்கியது. மறுநாள் 22.09.2025 அன்று மீனாட்சி அன்னை அலங்காரக் கோலத்துடன் ஆரம்பமான இந்த வைபவம், 01.10.2025 அன்று மகிஷாசுரமர்த்தினி அலங்காரத்துடன் பூர்த்தி அடைந்தது. நிறைவு நாளாகிய விஜயதசமியன்று (02.10.2025), பக்தர்கள் யோகாம்பிகை அன்னையை கொலு மண்டபத்திலிருந்து கர்ப்பக்கிருகத்தினுள் பக்திப் பரவசத்துடன் ஊர்வலமாக எழுந்தருளச் செய்ததுடன் நவராத்திரி இனிதே நிறைவுற்றது.*

### முருகனார் ஆராதனை

*ஸ்ரீ ரமண மகரிஷிகளின் அணுக்கத் தொண்டர்களுள் அளப்பரிய மதிப்புக்குரியவராக விளங்கியவர் முருகனார். ஒப்பற்ற தமிழ்ப் புலமை, ஆத்ம ஞானத்தின் அனுபவம், சிறந்த*



அருணை விஜய தின பூஜை



முருகனார் ஆராதனை

*குரு பக்தி, தன்னடக்கம் போன்ற தெய்விகப் பண்புகள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற முருகனாரின் ஆராதனை தினம், இந்த ஆண்டு 22.08.2025 ஆவணி அமாவாசைத் நாளில் ஆஸ்ரமத்தில் நிகழ்ந்தது. அவரது சமாதியில் சிறப்பான அபிஷேக அலங்காரங்களும், அவர் இயற்றிய பக்திப் பாடல்களின் பண்ணிசையும், அக்ஷரமணமாலை பாராயணமும் மனதை உருக்கும் வண்ணம் சிறப்பாக அரங்கேறின.*

## இராமநாதபுரம் ஸ்ரீ முருகனார் மந்திரம்

*முருகனார் ஆராதனை, ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்று பாத்தியப்பட்ட இராமநாதபுரம் ஸ்ரீ முருகனார் மந்திரத்தில் திரு. K. சுப்புராஜ் அவர்கள் தலைமையில், அக்ஷரமணமாலை, ரமண சந்நிதிமுறையில் இருந்து சில பாடல்கள் பாடப்பெற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் இதன் காப்பாளர் திரு. சிரஞ்சீவி அவர்கள் பொறுப்புடன் செய்திருந்தார்.*

## மண்டலாபிஷேகம்

*ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில், கடந்த ஆகஸ்ட் மாதம் 20ஆம் நாள், கும்பாபிஷேகப் பெருவிழா வெகு விமரிசையாய்ப் பூர்த்தியாயிற்று. கும்பாபிஷேகம் நிறைவுற்று ஒரு மண்டலம் (48 நாட்கள்) பூர்த்தியான சுப தினமாகிய 6/10/2025 அன்று, ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் மண்டலாபிஷேக சிறப்புப் பூஜை ஹோமம் மற்றும் அபிஷேக ஆராதனைகள் மிகுந்த பக்தியுடனும் பொலிவுடனும் இனிதே நடந்தேறின.*

## மேஜர் பார்த்தசாரதி

*மேஜர் பார்த்தசாரதி, 1940 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதி பிறந்தார். இந்திய இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு, அவர் 1990களின் மத்தியில் ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு வந்து, பல்வேறு பணிகளில் சேவை செய்து வந்தார். அவற்றில் இரத யாத்திரை பயணம், தெலுங்கு நூல்கள் பிரசுரிப்பதில் உதவியது, ஆசிரமத் தங்கும் அறைகளை ஆய்வு செய்தது, மற்றும் மாலை நேரத்தில்*

*பக்தர்களுக்குப் பகவானின் படைப்புகளை ஆங்கிலத்தில் வாசித்தது ஆகியவை அடங்கும்.*



*வயது மூப்பின் காரணமாக, ஆசிரம சேவைகளில் இருந்து விலகி, தன்னை முழுமையாக ஆன்மிகப் பயிற்சியில் ஈடுபடுத்திக் கொண்டார். பகவானின் 'ஆத்மவிசாரம்' என்னும் பாதையில் அமர்ந்த தியானம், அத்துடன் தினசரி வேதபாராயணம் செய்தல் ஆகியவற்றிலேயே அவரது நாட்கள் கழிந்தன.*

*2019 ஆம் ஆண்டில் அவருக்குச் சிறுநீரகச் சுரப்பிப் புற்றுநோய் (prostate cancer) இருப்பது கண்டறியப்பட்டபோதிலும், அவர் தன் பாதையில் உறுதியாக இருந்தார். தினமும் ஆசிரமத்திற்கு வருகை தந்து, சமீபத்தில் நடந்த மகா கும்பாபிஷேகத்திலும் கலந்துகொண்டார்.*

*மேஜர் பார்த்தசாரதி, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதி, அமைதியாக அருணாசலத்துடன் கலந்தார்.*

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



## மண்டலாபிஷேக பூஜை 6.10.2025



Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

